JESUS REDEEMS MINISTRIES

# ஜாமக்காரன் உலகம்

Volume: 16 | Issue: 06| August 2026 | Mohan C. Lazarus | Annual Subscription: ₹ 100 | Single Copy: ₹ 10



எல்லா கடினமான நேரங்களிலும் கூடவே இருக்கும் இயேசு

# நல்ல சிநேகிதன்!

# வாலிபர் உலகம்

**வாலிபர்களே!**

**உங்கள் ஆவிக்குரிய வாழ்வில் புதிய விழிப்புணர்வையும் மாற்றத்தையும் உருவாக்கும் இந்தப் பத்திரிகையை ஒவ்வொரு மாதமும் முழுமையாக வாசித்து, உங்கள் நண்பர்களுக்கும் வாசிக்க கொடுங்கள்.**




1 ஆண்டுக்கு ரூ.100/-

15 ஆண்டுகளுக்கு ரூ.1000/-

வாலிபர் உலகம் பத்திரிக்கைக்கான சந்தா அல்லது காணிக்கை செலுத்திய பின், 9750955547 என்ற எண்ணிற்கு தகவல் அனுப்பி உறுதிப்படுத்தவும்.
"வாலிபர் உலகம்" மாதாந்திர பத்திரிக்கை தமிழ், ஆங்கிலம், மலையாளம், ஹிந்தி ஆகிய மொழிகளில் வெளியிட்டு வருகிறோம்.

Scan ME

## உள்ளே!

4  CYBER SECURITYயை நோக்கிய பயணம்

12  நல்ல சிநேகிதன்!

1  மலைகளைத் தாண்டி வந்த சுவிசேஷம்

JESUS REDEEMS MINISTRIES
இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம், நாலுமாவடி, தூத்துக்குடி - 628 211.
Phone: 04639-353333 | Cell:9750955547 | E-mail: youth@jesusredeems.org
www.jesusredeems.com | youth.jesusredeems.com

# தலைவாசல்



*எனக்கு அன்பான வாலிபர்களே!*
இயேசுவின் இனிய நாமத்தில்
உங்களை வாழ்த்துகிறேன்.

இந்த எழுப்புதல் நாட்களில் வாலிபர்களாகிய உங்களின் பங்கு மிகவும் முக்கியமானது. நீங்கள் ஒரு சேனையாய் எழும்பிச் செல்லும்போது, தேசத்தில் செயல்படும் சத்துருவின் வல்லமை முறியடிக்கப்படும். சிறு குழுக்களாக இணைந்து ஜெபிப்பதற்கும், சுவிசேஷத்தை அறிவிப்பதற்கும், கட்டப்பட்டுள்ள ஆத்துமாக்களை விடுவிப்பதற்கும், சோர்ந்துபோன வாலிபர்களை தேவ வார்த்தையால் உயிர்ப்பிப்பதற்கும் தேவன் உங்களை அழைக்கிறார்.

குழுவாகச் செயல்பட முடியவில்லை என்றாலும், இரண்டு நண்பர்களாக இணைந்துகூட தேவப் பணியைச் செய்யலாம். "ஒருவன் ஆயிரம் பேரையும், இரண்டு பேர் பத்தாயிரம் பேரையும் துரத்த முடியும்" என்று வேதம் கூறுகிறது.

வாலிபனே, உன்னுடைய சிநேகிதனோடு இணைந்து தேவனுக்காக என்ன செய்து கொண்டிருக்கிறாய்?

**அப்போஸ்தலர் நாட்களில் பவுலும் சீலாவும் இணைந்து தேவனுடைய ஊழியத்தை வல்லமையாகச் செய்தார்கள். அதற்குக் காரணம் அவர்களிடத்தில் காணப்பட்ட மூன்று முக்கிய குணாதிசயங்கள்:**

## அசையாத மன உறுதி

அப்போஸ்தலர் 16-ஆம் அதிகாரத்தில், பிலிப்பி பட்டணத்தில் ஊழியம் செய்தபோது அவர்கள் அடிக்கப்பட்டு, சிறைச்சாலையின் உட்காவல் அறையில் அடைக்கப்பட்டு, தொழுமரத்தில் கட்டப்பட்டார்கள். இருந்தபோதிலும், நடுராத்திரியில் ஜெபித்து தேவனைத் துதித்தார்கள். அந்த இக்கட்டான சூழலிலும் அவர்கள் அசையாத விசுவாசத்தையும் தேவன்மேலுள்ள அன்பையும் வெளிப்படுத்தினார்கள்.

## ஒருமனம்


வேதனையும் அவமானமும் நிறைந்த நிலையிலும், சீலா பவுலைக் குற்றப்படுத்தவில்லை. மாறாக, ஊழியப் பாதையில் வரும் பாடுகளை ஏற்றுக்கொண்டு, பவுலோடு ஒருமனமாய் ஜெபித்து, தேவனை மகிமைப்படுத்தினார்.

## ஆத்துமாக்களைக் குறித்த பாரம்

"ஆண்டவரே, எங்களை விடுவியும்; உம்முடைய அன்பை இன்னும் பலருக்கு அறிவிக்க வேண்டும்" என்ற ஆத்துமப் பாரம்தான் அவர்களை இடைவிடாமல் ஜெபிக்கவும் துதிக்கவும் வைத்தது. அதன் விளைவாக சிறைச்சாலைக்காரனும் அவன் குடும்பத்தாரும் இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் பெற்றார்கள். இரண்டு நண்பர்களின் தேவபக்தி நிறைந்த நட்பு, பலரின் இரட்சிப்புக்குக் காரணமானது.

இன்று உங்கள் நட்பு வட்டாரம் எப்படி இருக்கிறது? உங்கள் நட்பு உங்களுக்கு மட்டும் மகிழ்ச்சியைத் தருகிறதா? அல்லது உங்கள் நட்பின் மூலம் தேவ இராஜ்யம் கட்டப்படுகிறதா?

நீங்களும் பவுலைப் போலவும், சீலாவைப் போலவும் தேவனுக்காக எழும்பி செயல்படலாமே!



கிறிஸ்துவின் பணியில்
மோகன் சி. லாசரஸ்

# CYBER SECURITYஐ நோக்கிய பயணம்

பெற்றோரின் மருத்துவர் கனவை விட்டுவிட்டு, தனது கனவான Cyber Security துறையைத் தேர்ந்தெடுத்து, இன்று அமெரிக்காவின் முன்னணி IT நிறுவனத்தில் Senior Security Consultant ஆகப் பணியாற்றி வரும் சகோதரர் Godson அவர்கள், இந்த இடத்தை அடைய எடுத்த முயற்சிகளையும், சந்தித்த சவால்களையும் அவரிடமிருந்தே கேட்டு அறிந்துகொள்வோமா?



சாட்சி: தொகுப்பு: காட்லின்

**Praise the Lord, பிரதர். உங்கள் குடும்பம் மற்றும் சிறுபிராயம் பற்றிச் சொல்லுங்களேன்?**

**Praise the Lord.** என் பெயர் **GODSON.** என் சொந்த ஊர் தமிழகத்தின் திருச்சி மாவட்டம். எங்கள் குடும்பத்தில் அப்பா, அம்மா, ஒரு அண்ணன் மற்றும் நான் இருக்கிறோம். அப்பாவும் அம்மாவும் தையல் தொழில் செய்கிறார்கள்; அண்ணன் IT நிறுவனத்தில் பணியாற்றுகிறார். நாங்கள் ஒரு கீழ்-நடுத்தர வர்க்கக் குடும்பம் (Lower Middle-Class Family). எங்களை வளர்ப்பதற்காக பெற்றோர் மிகவும் கஷ்டப்பட்டாலும், தேவனுக்கு உண்மையாய் வாழ்ந்த தேவபக்தியுள்ளவர்களாக இருந்தார்கள்.

என் சிறுவயதை நினைத்துப் பார்க்கும்போது, உபாகமம் 6:4–9 வசனங்களின் பிரதிபலிப்பை என் பெற்றோரிடம் காண முடிகிறது. தூங்கும்போதும், நடக்கும்போதும், பயணம் செய்யும்போதும், சாப்பிட உட்காரும்போதும் தேவனைப் பற்றியே பேசுவார்கள். தினமும் ஒரு வேத வசனத்தை மனப்பாடம் செய்தால்தான் சாப்பாடு கிடைக்கும் என்ற அளவிற்கு, சிறுவயதிலிருந்தே தேவ வார்த்தையில் எங்களை வளர்த்தார்கள்.

**சூப்பர்... பெற்றோரால் ஆவிக்குரிய பாதையில் வளர்க்கப்பட்ட உங்களுக்கு சிறுவயதில் என்ன ஆசை இருந்தது?**

9-ம் வகுப்பு வரை எனக்கென்று தனிப்பட்ட இலக்கு எதுவும் இல்லை. அதனால், என் பெற்றோரின் ஆசையையே என் இலக்காகக் கொண்டு படித்தேன். நான் **NEET** தேர்வில் வெற்றி பெற்று மருத்துவராக வேண்டும் என்பதற்காக, 10-ம் வகுப்பு படிக்கும்போதே என் பெற்றோர் ₹ 60,000 கடன் வாங்கி, 10, 11, 12-ம் வகுப்பு உயிரியல் பாடங்களைப் படிக்க வைத்தார்கள். அவர்களால் முடிந்த அனைத்தையும் செய்த அந்த நேரத்தில்தான், எனக்கு **Cyber Security** துறையின் மீது ஆர்வம் உருவானது. இருந்தாலும், நான் மருத்துவராக வேண்டும் என்பதே என் பெற்றோரின் விருப்பமாக இருந்தது.



### உங்கள் பெற்றோரின் ஆசையை நிறைவேற்றினீர்களா?

9, 10-ம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தபோது, சில நண்பர்கள் **Social Media Accounts-ஐ Hack** செய்வதைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்ததைத் தற்செயலாகக் கேட்டதன் மூலம், **Hacking** மற்றும் **Cyber Security** மீது எனக்கு ஆர்வம் ஏற்பட்டது. இதைப் பற்றி அறிந்துகொள்ள அப்பாவின் மொபைலைப் பயன்படுத்தினேன். ஆனால், அதற்குத் தேவையான கருவிகள் என்னிடம் இல்லை; அதனால் அப்பாவின் மொபைலைப் பயன்படுத்துவதே சிரமமாக இருந்தது.






12-ம் வகுப்பில் அரசாங்கம் வழங்கிய இலவச **Laptop** எனக்கு ஒரு பெரிய வாய்ப்பாக அமைந்தது. நண்பர்கள் அதில் **Games** விளையாடியபோது, நான் **Cyber Security** கற்றுக்கொள்வதற்காக மட்டுமே அதைப் பயன்படுத்தினேன். நான் என்ன படித்துக்கொண்டிருந்தேன் என்பது என் பெற்றோருக்குத் தெரியாது. **Laptop** இருந்தாலும், இணைய வசதி இல்லாத சூழ்நிலையில், ஆண்டவர் அந்தத் தேவையையும் அற்புதமாகச் சந்தித்தார்.

### சூப்பர்... உங்களுடைய Laptop ஆசையை தேவன் நிறைவேற்றினார்... சரி, Cyber Security-க்கு நிறைய படிக்க வேண்டுமே... எப்படி படித்தீர்கள்?

கொரோனா காலத்தில், **IDEA** நிறுவனம் நள்ளிரவு 12 மணி முதல் காலை 6 மணி வரை இலவச இணைய வசதி வழங்கியது. அதைப் பயன்படுத்தி, நான் தினமும் இரவு 12 மணி முதல் அதிகாலை 3 அல்லது 4 மணி வரை **Cyber Security** கற்றுக்கொண்டு, சிறிது நேரம் தூங்கிவிட்டு பள்ளிக்குச் செல்வேன். இரவு முழுவதும் **Laptop-ல்** நேரம் செலவிடுவதை என் பெற்றோர் விரும்பவில்லை; நான் என்ன கற்றுக்கொள்கிறேன் என்பதை அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை.

ஒரு நிறுவனத்தில் சென்று கற்க லட்சக்கணக்கான ரூபாய் தேவைப்பட்டிருக்கும். ஆனால் தேவனுடைய கிருபையால், ஒரு பைசா கூட செலவில்லாமல் கற்றுக்கொள்ளும் வாய்ப்பைப் பெற்றேன். இதன் மூலம் என் திறமைகள் வளர்ந்தன. ஒரு கட்டத்தில், வேலை பற்றிய சிந்தனையைவிட மேலும் கற்றுக்கொள்வதிலேயே முழு கவனம் செலுத்தினேன். கற்றுக்கொண்டவற்றை **Blog-ல்** எழுதவும் தொடங்கினேன்.







பெற்றோரும் ஏமாற்றமடைந்தார்கள். அந்த நேரத்தில், யாரிடமும் ஆலோசனை கேட்காமல் கல்லூரிப் படிப்பையும் பாதியிலேயே நிறுத்திவிட்டேன்.

அப்படிப்பட்ட சூழ்நிலையில், ஒரு Cyber Security நிறுவனத்தின் CEO-விடமிருந்து வேலைக்கான மின்னஞ்சல் வந்தது. நான் அதற்கு விண்ணப்பித்து சில வாரங்கள் பதில் வராததால் நம்பிக்கையை இழந்தேன். ஆனால், நான் பெற்ற CTF வெற்றியைப் பற்றிய பதிவைப் பார்த்த அதே CEO, பல டாலர் சம்பளத்துடன் ஒரு அமெரிக்க நிறுவனத்தில் என்னை வேலைக்கு சேர்த்தார். அப்போது எனக்கு 19-20 வயது இருக்கும். கடந்த 4 ஆண்டுகளாக அந்த நிறுவனத்தில் பணியாற்றி வருகிறேன்.

வேலையில் சேர்ந்தபோது எங்கள் குடும்பம் கடனில் இருந்தது. பல ஆண்டுகளாக இருந்த அந்தச் சுமையை ஆண்டவர் தம்முடைய கிருபையால் விரைவாகத் தீர்க்க உதவினார். மேலும், எங்கள் சொந்த ஊரில் ஒரு நல்ல வீடு கட்ட வேண்டும் என்ற எங்களுடைய ஆசையையும் நிறைவேற்றி வருகிறார்.

சுமார் ஒரு வருடம் தினமும் பல மணிநேரங்கள் செலவழித்து கற்றுக்கொண்டாலும், இதை ஒரு தொழிலாக மாற்ற முடியும் என்பதோ, Cyber Security துறையில் சட்டப்பூர்வமாக வேலை செய்ய முடியும் என்பதோ அப்போது எனக்குத் தெரியாது.

## அப்படியானால் நீங்கள் வேலைக்காக முயற்சி எடுக்கவில்லையா? சரி, பள்ளிப் படிப்பை முடித்தீர்களா?

12-ம் வகுப்பு விடுமுறையின்போது, பெங்களூரைச் சேர்ந்த ஒரு நிறுவனத்தில் மாதம் ₹25,000 ஊதியத்துடன் Internship-ல் சேர்ந்தேன். அப்போதுதான், நான் தூக்கமின்றி கற்றுக்கொண்டதற்கான பலனை என் பெற்றோர் காண ஆரம்பித்தார்கள்.

பின்னர் BCA படிப்பில் சேர்ந்தேன். ஆனால், அதன் பிறகான என்னுடைய பயணம் மிக எளிதாக இருக்கவில்லை. ஒரு முழுநேர வேலைக்காகச் சென்ற முதல் Interview-யில், Cyber Security பற்றிய போதிய புரிதல் இல்லாத நபர் interview எடுத்த காரணத்தால் நான் நிராகரிக்கப்பட்டேன். அந்த அனுபவம் என்னை மிகவும் பாதித்தது. நான் தவறான பாதையைத் தேர்ந்தெடுத்துவிட்டேனோ என்ற எண்ணமும் வந்தது.

Zoho போன்ற நிறுவனங்களுக்கும் விண்ணப்பித்தேன். ஆனால் எந்தப் பதிலும் வரவில்லை. என்மீது நம்பிக்கை வைத்திருந்த என்

## உங்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் எப்படி மாற்றம் வந்தது?

நான் ஆவிக்குரிய சூழலில் வளர்க்கப்பட்டிருந்தாலும், நீண்ட காலம் என் விசுவாசம் ஒரு வழக்கமாக மட்டுமே இருந்தது. சபைக்குச் செல்வது, ஜெபிப்பது போன்ற காரியங்களைச் செய்தாலும், என் வாழ்க்கை முழுமையாக தேவனோடு இல்லை.



ஆனால், வாலிப வயதில் தான், பிறர் சொல்லிக் கொடுத்த விசுவாசத்தைப் பின்பற்றுவதற்குப் பதிலாக, தேவனை நானே தனிப்பட்ட முறையில் அறிய ஆரம்பித்தேன்.

அந்தக் காலகட்டத்தில்தான் என் விசுவாசம் உண்மையானதாக மாறியது. அதே நேரத்தில், என் வாழ்க்கையிலும் பல கதவுகள் ஒன்றன்பின் ஒன்றாகத் திறக்கத் தொடங்கின.

திரும்பிப் பார்க்கும்போது, இந்த ஆசீர்வாதங்களை வழங்குவதற்கு முன், நான் உண்மையாக ஆண்டவரிடம் வர வேண்டும் என்று தேவன் காத்திருந்தாரோ என்று தோன்றுகிறது. நான் வெறும் பாரம்பரியத்திற்காக வாழ்ந்த ஆண்டுகளில்கூட, அவர் அமைதியாக என்னை வழிநடத்திக் கொண்டிருந்தார் என்பதை இன்று தெளிவாக உணர்கிறேன்.

### வாலிபர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

நீதிமொழிகள் 21:31-ல், **“குதிரை யுத்தநாளுக்கு ஆயத்தமாக்கப்படும்; ஜெயமோ கர்த்தரால் வரும்”** என்று வாசிக்கிறோம்.

என் வாழ்க்கையிலும் பல தூக்கமில்லாத இரவுகள், கடின உழைப்பு மற்றும் தோல்விகள் இருந்தன. ஆனால், ஜெயத்தைக் கொடுத்தவர் கர்த்தர்.



இன்று நம் கைகளில் இருக்கும் தொலைபேசியும் இணையமும், ஒரு திறமையைக் கற்கவும், வாழ்க்கையை உருவாக்கவும், ஆண்டவரில் வளரவும் பயன்படலாம். அதே நேரத்தில், நம் நேரத்தையும் கவனத்தையும் வீணாக்கவும் முடியும்.

**எனவே, உங்கள் எதிர்காலத்தை இயேசுவிடம் ஒப்படையுங்கள். அவர் உங்களை சரியான பாதையில் வழிநடத்தி, உங்கள் அழைப்பை நிறைவேற்ற தேவையான கிருபையையும் விருப்பத்தையும் அளிப்பார்.**





# தேசத்திற்கு க்ஷேமத்தைக் கொடுப்பேன்!!

நான் இந்தியாவில் பிறந்ததற்காக தேவனைத் துதிக்கிறேன்! இந்தியனாக இருப்பதில் பெருமைப்படுகிறேன்! வானத்தையும் பூமியையும் படைத்த தேவன், என்னை இந்தியாவில் பிறக்கும்படி செய்ததற்காக அவருக்கு நன்றி செலுத்துகிறேன்.

உலகம் முழுவதையும் படைத்து நேசிக்கும் தேவன், இந்தியாவின் மீதும் ஒரு விசேஷமான அன்பு வைத்திருக்கிறார் என்று நான் விசுவாசிக்கிறேன். இன்று உலகமே வியந்து பார்க்கும் அமெரிக்கா போன்ற நாடுகளின் பெயர்கள் கூட வேதத்தில் இல்லை. ஆனால் ''இந்தியா'' என்ற நம் தேசத்தின் பெயர் தேவனுடைய வார்த்தையாகிய வேதத்தில் இடம்பெற்றிருப்பதைப் பார்க்கும்போது எனக்கு மகிழ்ச்சியாகவும் பெருமையாகவும் இருக்கிறது **(எஸ்தர் 1:1; 8:9).**

''இந்திய தேசம் உலக அரங்கில் உயர்ந்த இடத்தில் இருக்கும்! எல்லா விதத்திலும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும்! கர்த்தரை அறிகிற அறிவினால் இந்திய தேசம் நிரம்பியிருக்கும்!'' என்பது நம் தேசத்தைக் குறித்த தீர்க்கதரிசன வாக்குத்தத்தம். பல ஆண்டுகளுக்கு முன்பே ஆண்டவர் இதை வெளிப்படுத்தியதால், இதற்காக நாம் தொடர்ந்து ஜெபித்து வருகிறோம்.

இந்த வாக்குத்தத்தம் நம் தேசத்தில் நிறைவேற வேண்டுமென்றால், தேவப் பிள்ளைகளாகிய நாம் சில காரியங்களைச் செய்ய வேண்டும்.

## ★ தேசத்தை நேசியுங்கள்! ★

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம் இந்திய தேசத்தை நேசிப்பதுபோல, நாமும் நம் தேசத்தை நேசிக்க வேண்டும். ஆண்டவர் இந்த தேசத்தின் மீது அதிக அன்பு வைத்திருக்கிறார். அவர் பாவிகளின் சிநேகிதர். இயேசு மக்களை நேசிப்பதுபோல, நாமும் மக்களை நேசிக்க வேண்டும்.

நினிவே பட்டண மக்கள் பாவம் செய்து தேவனைத் துக்கப்படுத்தினார்கள். ஆனாலும் நீதியுள்ள தேவன் அவர்களை அழிக்க விரும்பவில்லை. அவர்கள் பாவத்தை விட்டு மனந்திரும்ப வேண்டும் என்பதையே விரும்பினார். அதனால்தான், ''வலது கைக்கும் இடது கைக்கும் வித்தியாசம் அறியாத இலட்சத்து இருபதினாயிரம் பேருக்கு

செய்தி:
மோகன் சி. லாசரஸ்



அதிகமான மனுஷரும் அநேக மிருகஜீவன்களும் இருக்கிற மகா நகரமாகிய நினிவேக்காக நான் பரிதபியாமலிருப்பேனோ?'' என்று கேட்டார் (**யோனா 4:11**). பாவத்தில் வாழும் மக்களுக்காக தேவனுடைய இருதயம் பரிதபிப்பதுபோல, நம் இருதயத்திலும் மக்களுக்கான பாரம் இருக்க வேண்டும். தமிழ்நாட்டில் வாழும் 8 கோடி மக்களுக்காகவும், இந்தியாவில் வாழும் 146 கோடி மக்களுக்காகவும் நாம் பரிதாபம் கொள்ள வேண்டும்.

## ★ தேசத்திற்காக ஜெபியுங்கள்! ★

தேசத்தை நேசிப்பது உண்மையானால், அதற்காக ஜெபிக்க வேண்டும். ''நான் தேசத்தை நேசிக்கிறேன்'' என்று சொல்வது மட்டும் போதாது. தேசத்திற்காக ஜெபிப்பவர்கள்தான் உண்மையாகவே தேசத்தை நேசிக்கிறவர்கள்.

''எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும், ஜெபங்களையும், வேண்டுதல்களையும், ஸ்தோத்திரங்களையும் பண்ண வேண்டும்; ராஜாக்களுக்காகவும் அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே செய்ய வேண்டும்...'' என்று வேதாகமம் நம்மை அறிவுறுத்துகிறது.
**(1 தீமோத்தேயு 2:1-4).**

இந்தியாவில் உள்ள அனைத்து மாநில மக்களுக்காகவும், தேசத்தின் தலைவர்களுக்காகவும், அதிகாரத்தில் இருப்பவர்களுக்காகவும் கருத்தாக ஜெபிக்க வேண்டும். நாம் ஜெபிக்க ஜெபிக்கத்தான் ஆண்டவர் நம் தேசத்தை ஆசீர்வதிப்பார்.

## ★ தேசத்திற்கான கடமையைச் செய்யுங்கள்! ★

''யாவருக்கும் செலுத்த வேண்டிய கடமைகளைச் செலுத்துங்கள்'' என்று வேதாகமம் சொல்கிறது (**ரோமர் 13:7**). நாம் செலுத்தும் வரிப்பணத்தை வைத்துத்தான் ஒரு நாட்டை நிர்வகிக்க முடியும். எனவே அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய வரிகளை நேர்மையாகச் செலுத்த வேண்டும். அரசாங்கம் தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஒரு அமைப்பு. தேசத்தை ஆளுகிற தலைவர்களும், அதிகாரிகளும் தேவனுடைய ஊழியக்காரர்கள் என்று வேதம் கூறுகிறது (**ரோமர் 13:4,6**). வீட்டு வரி, நிலவரி, வருமான வரி என நாம் செலுத்த வேண்டியவற்றை ஒழுங்காகச் செலுத்த வேண்டும். ஒரு நல்ல கிறிஸ்தவனாக மட்டுமல்ல, ஒரு நல்ல குடிமகனாகவும் வாழ வேண்டும். நம்முடைய கடமைகளை உண்மையாகச் செய்யும்போது, கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பார்.


## ★ தேசத்திற்கு நற்செய்தியை அறிவியுங்கள்! ★

இயேசு கிறிஸ்துவை அறிவிப்பது மதம் மாற்றுகிற காரியம் அல்ல. இயேசு ஒருபோதும் ''மதத்தைப் பரப்புங்கள்'' என்று சொல்லவில்லை. ஆனால், ''சுவிசேஷமாகிய நற்செய்தியை எல்லாருக்கும் அறிவியுங்கள்'' என்று கட்டளையிட்டார் (**மாற்கு 16:15**). ஒரு மனிதன் இயேசுவை தனது உள்ளத்தில் ஏற்றுக்கொள்ளும்போது, அவனுடைய வாழ்க்கை மாறுகிறது. ஒரு குடும்பம் இயேசுவை ஏற்றுக்கொள்ளும்போது, அந்த குடும்பம் மாறுகிறது. ஒரு சமுதாயம் இயேசுவை ஏற்றுக்கொள்ளும்போது, அந்த சமுதாயம் மாறுகிறது. பாவங்கள் நீங்குகின்றன. சாபங்கள் முறிகின்றன. ஆசீர்வாதங்கள் பெருகுகின்றன. இப்படியாக மக்களின் வாழ்க்கையில் மாற்றம் வரும்போது, தேசத்திலும் மாற்றம் வரும். அதனால் இந்த இயேசு கிறிஸ்துவை எல்லோருக்கும் அறிவிப்பது நம்முடைய பொறுப்பு.



**அன்பான வாலிபர்களே,**
**நம் இந்திய தேசத்தை நேசிப்போம்!**
**நம் இந்திய தேசத்திற்காக ஜெபிப்போம்!**
**நம் இந்திய தேசத்திற்கான பொறுப்புகளை உண்மையுடன் நிறைவேற்றுவோம்!**
**நம் இந்திய தேசத்திற்கு நற்செய்தியை அறிவிப்போம்!**
**அப்போது ஆண்டவர் நம் தேசத்திற்கு ஷேமத்தையும் சமாதானத்தையும் கொடுப்பார். நம் தேசத்தைக் குறித்த தேவனுடைய தீர்க்கதரிசன வாக்குத்தத்தங்கள் நிச்சயமாக நிறைவேறும்!**

ஆலோசனை: அவி




# PARENTS' PRESSURE

Heart Beat

அண்ணா, நான் சிறுவயதிலிருந்தே யாரிடமும் அதிகமாகப் பேச மாட்டேன். ஆனால் கல்லூரிக்கு வந்த பிறகு எனக்கு நிறைய நண்பர்களும் தோழிகளும் கிடைத்தார்கள். அவர்களிடம் இயல்பாகப் பேசுவேன். என்னுடைய **MBBS** படிப்பின் முதல் இரண்டு வருடங்களிலும் என் முழு கவனமும் படிப்பில்தான் இருந்தது. அதனால் நண்பர்களுடன் அதிக நேரம் செலவிடவே முடியவில்லை. இப்போது **3rd Year** வந்ததால் கொஞ்சம் **Free Time** கிடைக்கிறது. அதனால் நண்பர்களிடம் பேசுகிறேன். பெரும்பாலும் எங்கள் உரையாடல்கள் படிப்பைப் பற்றித்தான் இருக்கும். ஆனால் நண்பர்கள் மற்றும் தோழிகளிடமிருந்து **Phone Calls** வருவதால், என் பெற்றோர் என்னை மிகவும் சந்தேகப்படுகிறார்கள். ''**3rd Year** வந்தவுடன் உன் **Focus** போய்விட்டது. **Time Waste** பண்ண ஆரம்பிச்சுட்டே. எப்பவும் **Chatting, Social Media...** இப்படிப் போனால் வாழ்க்கையில் சாதிக்கவும் முடியாது, **Shine** பண்ணவும் முடியாது'' என்று மிகவும் மனதைப் புண்படுத்தும் வகையில் பேசிவிட்டார்கள். இதனால் என்னுடைய **Confidence** மிகவும் குறைந்துவிட்டது. நான் யாரிடமும் தவறாகப் பேசவில்லை. எல்லோரையும் நண்பர்களாகத்தான் நினைத்து பேசுகிறேன். என் பெற்றோரே என்னை நம்பாதபோது, அது மிகவும் வேதனையாக இருக்கிறது. **Girls**-கிட்ட பேசுவது தவறா? பேசினாலே அது **Love**-ஆக மாறிவிடுமா? நான் இன்னும் என் **Studies**-ல முழு **Focus**-ஆகத்தான் இருக்கிறேன். என் பெற்றோரின் **Perception** தவறாக இருப்பதால், நான் என்ன செய்ய முடியும்? ஏன் இன்னும் **21st Century**-யிலும் சில **Parents** இவ்வளவு **Conservative**-ஆக இருக்கிறார்கள்? **I'm really down... Not able to move on. Kindly help me!**

— ரூபன், சென்னை.

**Dear Ruban, Just Relax!**

உங்களுடைய பெற்றோர் பேசிய வார்த்தைகள் உங்களுடைய Confidence level-ஐ குறைத்திருக்கலாம். உங்கள் படிப்பின் வேகத்தையும் பாதித்திருக்கலாம். ஆனால் Don't worry. I can understand your pain. நீ ambitiousஆன ஒரு இளைஞன். இவ்வளவு சீக்கிரம் மனம் உடைந்து போகக் கூடாது. You can achieve your dream.

ரூபன், ''உன் Parents ஒரு Phone Call-ஐ வைத்து என்னை **Judge** பண்ணிட்டாங்களே'' என்று வேதனைப்படுவதைவிட, அவர்களுடைய தவறான புரிதலை எப்படி சரிசெய்யலாம்? என்று யோசித்துப் பாருங்கள்.

உங்களுடைய பெற்றோர் வளர்ந்த காலமும், நீங்கள் வளர்ந்து கொண்டிருக்கும் காலமும் மிகவும் வித்தியாசமானவை. அந்த தலைமுறையினருக்கு, உங்களைப் போன்ற **Gen Z** இளைஞர்களின் உலகத்தைப் புரிந்துகொள்வது சில நேரங்களில் சற்று கடினமாக இருக்கலாம். அவர்களுக்கு பல நேரங்களில் அழுத்தம் கொடுக்கத் தெரிந்திருக்கலாம்; ஆனால் தங்களுடைய

பயத்தையும் அன்பையும் சரியான முறையில் வெளிப்படுத்தத் தெரியாமல் போய்விடுகிறது.

அவர்களுடைய எல்லா கடுமையான வார்த்தைகளுக்குப் பின்னாலும், ஒரு விஷயம் மட்டும் உறுதியாக இருக்கிறது ரூபன். அது உன் மீது இருக்கும் அளவில்லா அன்பு. ‘‘என் மகன் இந்த உலகத்தில் வழிதவறிவிடக் கூடாது... அவன் வாழ்க்கையில் பெரிய சாதனை செய்ய வேண்டும்... சறுக்கி விழக்கூடாது...’’ என்ற பெற்றோரின் கவலைதான், பல நேரங்களில் கோபமாக வெளிப்படுகிறது. **Pressure Cooker** அதிக சத்தம் போடுவது போல, சில பெற்றோர்களும் உணர்ச்சிவசப்பட்டு பேசிவிடுவார்கள். ஆனால் சரியான நேரத்தில் அமைதியான பதில் கொடுத்தால், அந்த கோபம் தானாகவே குறைந்து விடும்.

## ரூபன், சில ஆலோசனைகள்

- முதல் இரண்டு வருடங்களாக **Phone**-ஐ அதிகமாக பயன்படுத்தாத நீ, இப்போது திடீரென்று அதிக நேரம் **Phone**-ல் இருப்பது, அவர்களுடைய சந்தேகத்திற்குக் காரணமாக இருக்கலாம்.

- ஒரு நாள் அமைதியாக **Phone**-ஐ அவர்களிடம் கொடுத்து, ‘‘அப்பா... நான் கண்டிப்பாக **Dr. Ruban** ஆகி உங்களை தலைநிமிர்ந்து நடக்க வைப்பேன். என் மீது உங்களுக்கு முழு நம்பிக்கை வந்த பிறகு இந்த **Phone**-ஐ எனக்குத் திருப்பிக் கொடுங்கள்’’ என்று சொல்லிப் பாரு. அந்த ஒரு வார்த்தை, அவர்களுடைய மனதை மாற்ற ஆரம்பித்து விடலாம்.

- இந்திய பெற்றோர்களைப் போல பிள்ளைகளை நேசிக்கும் பெற்றோர்களைக் கண்டுபிடிப்பது மிகவும் அரிது. அவர்களுடைய தியாகத்திற்கும் அன்பிற்கும் அளவே கிடையாது.

- அவர்கள் விரும்புவது ஒன்றுதான்... ‘‘என் பிள்ளை உயர வேண்டும்; தோற்றுப் போகக் கூடாது; வாழ்க்கையை வீணாக்கிக் கொள்ளக் கூடாது.’’

- சில பெற்றோர்களுக்கு அந்த அன்பை அமைதியாகச் சொல்லத் தெரியும். சிலருக்கு கத்தித் தான் சொல்லத் தெரியும். அதனால்தான் குடும்பங்களில் தேவையற்ற இடைவெளிகளும், மனக்கசப்புகளும் உருவாகின்றன.



## இன்னொரு முக்கியமான விஷயம்...

நீ இரண்டு வருடங்கள் முழு கவனத்துடன் படித்ததால்தான் இன்று வெற்றிகரமாக **3rd Year**-க்கு வந்திருக்கிறாய். இப்போது **Academic Pressure** கொஞ்சம் குறைந்திருக்கலாம். அதற்காக You can’t spend your time just like that without any boundaries.

**Girls**-கிட்ட பேசுவது தவறா? இல்லையா என்று கேட்கிறீர்கள்....

ஒரு பெண்ணுடன் பேசுவதும், நல்ல நட்பு வைத்திருப்பதும் தவறல்ல. ஆனால் ஒரு உண்மையை மறந்துவிடாதே.

**Friendship**-க்கும் **Love**-க்கும் இடையில் மிகவும் மெல்லிய ஒரு கோடு **(Thin Line)** தான் இருக்கிறது.

பலர் அறியாமலேயே அந்த எல்லையைத் தாண்டி விடுகிறார்கள். அதனால் எதிர்பாலின நண்பர்களுடன் பேசும்போதும், **Chat** செய்யும்போதும், எப்போதும் ஆரோக்கியமான எல்லைகளை (Healthy Boundaries) காத்துக்கொள். நீ தவறு செய்யவில்லை என்றாலும், உன் நடத்தையும், நேர நிர்வாகமும், முன்னுரிமைகளும், உன் பெற்றோருக்கு நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் இருக்கட்டும்.

### இறுதியாக...

**ரூபன், பெற்றோர்களை மாற்றுவது எப்போதும் நம் கையில் இருக்காது. ஆனால் நம்முடைய அணுகுமுறையை மாற்றுவது நம்மால் முடியும். பல நேரங்களில், அதுவே குடும்ப உறவுகளை மீண்டும் அழகாக மாற்றிவிடும்.**

**உன்னுடைய இலட்சியமான Doctor என்ற கனவை அடைய தேவன் உனக்கு நிச்சயமாக உதவுவார். அதுமட்டுமல்ல, உன்னைப் பரிசுத்தமாகக் காத்து, ஞானத்தையும் பெலனையும் தந்து, உன் படிப்பில் மேலும் சிறக்கச் செய்வார்.**

Stay focused. Stay humble. Stay prayerful.

All the very best, Dr. Ruban!



முகப்பு செய்தி: சதீஷ்

# நல்ல சிநேகிதன்!

உலகிலுள்ள அனைத்து உறவுகளும் நமக்குப் பிறப்பினாலோ அல்லது சூழ்நிலையாலோ அமைகின்றன. ஆனால், நாமாகவே தேடி தேர்ந்தெடுக்கும் ஒரு உன்னதமான உறவு நட்பு மட்டுமே. இருப்பினும், நல்ல நண்பன் என்று நாம் நினைப்பவர்கள் பல நேரங்களில் நம்மை ஏமாற்றலாம் அல்லது சூழ்நிலை காரணமாக நம்மை விட்டுப் பிரியலாம். ஆனால் எந்தச் சூழ்நிலையிலும் நம்மை விட்டு விலகாத, என்றும் மாறாத நல்ல நண்பன் இயேசு ஒருவர் மட்டுமே.

ஒருவனை நல்லவனாகவும் கெட்டவனாகவும் மாற்றுவதில் நண்பர்களின் பங்கு மிக முக்கியமானது. நல்ல குடும்பத்தில் பிறந்த ஒருவன் தவறான நண்பர்களுடன் ஐக்கியம் வைத்துக்கொள்ளும்போது, அவனுடைய வாழ்க்கை சீரழியும் நிலை உருவாகிறது. அதேபோல், மிகவும் மோசமான சூழ்நிலையில் பிறந்திருந்தாலும், நல்ல நண்பர்கள் இருந்தால் அவனுடைய வாழ்க்கை வளமிக்கதாக மாறும்.

தன் வேலைக்காரர்களையும் பிள்ளைகளைப் போல நடத்தும் அளவிற்கு அன்பும் நல்லொழுக்கமும் கொண்ட ஒரு நல்ல தந்தை இருந்தபோதிலும், தவறான நண்பர்களின் தாக்கத்தினால் ''இளைய குமாரன்'' தவறான வழியில் சென்று துன்மார்க்க வாழ்க்கை வாழ்ந்து கெட்ட குமாரன் ஆனான். **"மோசம் போகாதிருங்கள்; ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும்" (I கொரி. 15:33).** அவனுக்கு நல்ல குடும்பம் இருந்தும், தவறான சிநேகம் அவனைப் பாவத்திற்குள் தள்ளியது. எனவே நாம் யாருடன் நட்பு வைத்திருக்கிறோம், யாருடைய ஆலோசனைகளுக்குச் செவி கொடுக்கிறோம் என்பதில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். தவறான சிநேகம் நம் வாழ்க்கையை சீரழித்துவிடும்.

மோசே இஸ்ரவேல் ஜனங்களை கானான் தேசத்திற்குக் கொண்டு செல்லும்போது, அந்த தேசத்தை உளவு பார்க்க பன்னிரண்டு பேரை அனுப்பினார். அவர்களில் யோசுவாவும் காலேபும் இருந்தனர். இவர்கள் இருவரும் முழுமனதுடன் தேவனை நம்பியவர்களாகவும், ஒருவருக்கொருவர் உறுதுணையாக இருந்த நல்ல சிநேகிதர்களாகவும் விளங்கினர்.



நல்ல நண்பர்கள் நம்மை தேவனிடத்தில் நெருக்கமாக நடத்துவார்கள். தவறான வழியில் அழைத்துச் செல்லாமல், விசுவாசத்தில் உறுதியாக நிற்க உதவுவார்கள். அதுமட்டுமல்லாமல், எல்லாச் சூழ்நிலைகளிலும் நம்மோடு இருப்பார்கள்.

யோசுவாவிற்கும் காலேபிற்கும் எதிர்மறையான சூழ்நிலைகள் வந்தபோதும், அவர்கள் தங்கள் விசுவாசத்தில் உறுதியாக நிலைத்திருந்தார்கள். எந்தச் சூழ்நிலையிலும் விட்டுக்கொடுக்காத நல்ல நண்பர்களாக இருந்தனர். **“சிநேகிதன் எல்லாக் காலத்திலும் சிநேகிப்பான்” (நீதி. 17:17).**

மோசேக்குப் பிறகு யோசுவா இஸ்ரவேல் ஜனங்களை வழிநடத்த தலைவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். காலேபும் அதே அளவு தகுதியுள்ளவர்தான். இருந்தாலும், அவர் யோசுவாவைப் பார்த்துப் பொறாமைப்படவில்லை. யோசுவாவின் தலைமைத்துவத்திற்கு இறுதிவரை துணைநின்று ஆதரவளித்தார்.

உங்கள் நண்பன் உங்களைவிட படிப்பிலோ, வேலையிலோ அல்லது வாழ்க்கையிலோ உயர்ந்த நிலைக்குச் செல்லும்போது, அதை மனதாரக் கொண்டாடுவதுதான் உண்மையான சிநேகம். ஈகோ இல்லாத இடத்தில்தான் நட்பு நிலைத்திருக்கும். உங்கள் இலக்குகளை நோக்கிச் செல்லும்போது, ‘‘உன்னால் முடியாது’’ என்று கேலி செய்யும் நண்பர்களைவிட, ‘‘உன்னால் முடியும்’’ என்று உற்சாகப்படுத்தும் காலேபைப் போன்ற நல்ல நண்பர்களைத் தேர்ந்தெடுங்கள்.

யோசுவாவும் காலேபும் உலகப் பார்வையில் சிறந்த சிநேகிதர்களாக இருந்திருக்கலாம். ஆனால் அவர்களைவிட மிக நெருக்கமான சிறந்த நண்பராக இயேசு இருக்கிறார். நம்முடைய நெருங்கிய நண்பர்கள் கூட சில நேரங்களில் busyயாக இருக்கலாம்; ஆனால் இயேசு எப்போதும் எல்லாச் சூழ்நிலைகளிலும் availableஆக இருக்கும் நல்ல நண்பனாக இருக்கிறார்.



அதுமட்டுமல்லாமல், நாம் வழிதவறி பாவப் பாதையில் நடக்கும்போது, நம்மைச் சரிப்படுத்தி நல்ல பாதையில் வழிநடத்தும் நண்பனாகவும் இருக்கிறார். **“நான் உனக்குப் போதித்து, நீ நடக்க வேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; உன்மேல் என் கண்ணை வைத்து உனக்கு ஆலோசனை சொல்லுவேன்” (சங். 32:8).**

**எனக்கன்பான வாலிபர்களே, நல்ல சிநேகிதன் என்பவன் உங்கள் சந்தோஷத்தில் மட்டும் பங்குபெறுபவன் அல்ல; ஒட்டுமொத்த உலகமே உங்களுக்கு எதிராக நிற்கும்போதும், உங்களுக்காக உங்களோடு கூட நிற்பவன்தான் நல்ல சிநேகிதன். இதை இயேசு ஒருவரால் மட்டுமே செய்ய முடியும்; வேறு யாராலும் முடியாது. ‘‘இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்’’ (மத். 28:20) என்று அவர் வாக்குத்தத்தம் அளித்துள்ளார்.**

**ஆகவே, வாழ்க்கையில் நல்ல நண்பர்களைத் தேர்ந்தெடுங்கள்; ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக, உங்கள் சிறந்த நண்பனாகிய இயேசுவோடு நெருக்கமான உறவை வளர்த்துக்கொள்ளுங்கள்.**

சிந்திக்க : ரூத்

# தாவீதின் நண்பர்கள் கிறிஸ்துவின் நண்பர்கள்: ஓர் ஒப்புமை

## மனக் கசப்பினால் விசுவாசத் துரோகிகளாக மாறிய நம்பகமான நண்பர்கள்




**அகித்தோப்பேல்** – தாவீதின் மிக நெருங்கிய, புத்திசாலியான ஆலோசகர். பத்சேபாளின் உறவினன். தாவீதுக்கும் அரண்மனையில் உள்ளவர்களுக்கும் தேவதூதனைப் போல் இருந்தவர் (2 சாமு. 16:23). இருப்பினும், மகன் அப்சலோம் தன் தந்தைக்கு விரோதமாக எழும்பும்போது, தாவீதை வீழ்த்தவும், அவருக்குரியதை அபகரிக்கவும் தீய ஆலோசனை வழங்கினார். முடிவில், தூக்குப்போட்டு உயிரை மாய்த்துக்கொண்டார் (2 சாமு. 17:23).

**யூதாஸ்காரியோத்து:** இயேசு கிறிஸ்துவோடு மூன்றரை ஆண்டுகள் பயணம் செய்தவர் யூதாஸ்காரியோத்து. பணப்பையை வைத்துக்கொள்ளும் அளவுக்கு நம்பகமானவராக இருந்தார். தனக்குத் துரோகம் செய்தபோதும், இயேசு அவரை ‘‘சிநேகிதனே’’ என்றே அழைத்தார். இருப்பினும், அந்த நேரம் வரையிலும் உணர்வில்லாமல் இருந்து, இயேசுவுக்குத் துரோகம் செய்தார். முடிவில், தூக்குப்போட்டு உயிரை மாய்த்துக்கொண்டதோடு மட்டுமல்லாமல், மற்ற பதினொரு அப்போஸ்தலர்களுக்குக் கிடைத்த அனந்த பாக்கியத்தையும் இழந்தார்.




நம்பகத்தன்மையை உடைக்கும் குணம் பெரும்பாலும் மன்னிக்காத

இருதயத்திலிருந்தே வருகிறது. இதை மனதில் வைத்து, நாமும் இயேசுவுக்கு எந்த விதத்திலும் துரோகம் செய்யாத நண்பர்களாக இருப்போம். அதே சமயம், இயேசுவைப் போல் வாழ விரும்பும் நம் வாழ்க்கையிலும் அத்தகைய நண்பர்கள் வரும்போது, ஞானமாகவும் அன்பாகவும் செயல்படுவோம். (வாசிக்க: எபி. 12:15; நீதி. 27:6; லூக்கா 17:3)

## உடன்படிக்கையினால் விசுவாசமுள்ளவர்களாக மாறிய உடன்படிக்கையின் நண்பர்கள்




**யோனத்தான்** – தாவீதை உயிருக்கு உயிராகவும், தன் ஆத்துமாவைப் போலவும் நேசித்தவர். தாவீதே கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்ட இராஜா என்பதை உணர்ந்ததால், தன் உயிரைப் பணயம் வைத்து, தாவீதை சத்துருவாக எண்ணிய தனது தந்தையின் கையிலிருந்து காப்பாற்றினார். தனது மகிமையையும், பதவியையும் விட்டுக்கொடுத்தார். செய்வேன் என்று சொன்ன தனது தீர்மானங்களையும் உடன்படிக்கைகளையும் காத்துக்கொண்டார்.

**யோவான் ஸ்நானகன்:** இயேசு கிறிஸ்துவுக்கு முன்னோடியாக வந்த யோவான் ஸ்நானகன், ''நான் சிறுகவும் அவர் பெருகவும் வேண்டும்'' என்று தன் மகிமையையும் புகழையும் விட்டுக்கொடுத்தார். தாயின் வயிற்றிலேயே பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்ட மாபெரும் தீர்க்கதரிசியானாலும், தன்னை மணவாளனின் தோழன் என்றே குறிப்பிடுகிறார். இயேசுவை தன்னலமற்றவர்களாகப் பின்பற்றிய சீஷர்களும் இயேசுவின் நண்பர்கள் என்று அழைக்கப்பட்டனர். யூதாஸைத் தவிர மற்ற அனைவரும் இறுதிவரை உடன்படிக்கையைக் காத்து, இரத்தசாட்சிகளாக மரித்தனர். பரலோகத்திலும் அவருக்கே மகிமையைச் செலுத்துகின்றனர்.

நாமும் கிறிஸ்துவோடு செய்த உடன்படிக்கையைக் காத்துக்கொள்வோம். அவருக்கே மகிமையைச் செலுத்துவோம். நாம் என்றும் அவரது நண்பர்கள்தான். அதேபோல், பிறரிடம் செய்த உடன்படிக்கையையும் உடைக்காமல், ஐக்கியத்தைக் காத்துக்கொள்வோம்.
(வாசிக்க: நீதி. 18:24; யோவான் 3:30; 15:15; வெளி. 4:10,11)



# முயற்சியால் முத்திரை பதித்தவர்!

சாதனை சுமா கிரேஷன்



**அன்பான இளம் சாதனையாளர்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்!**

**இந்த மாதம் நாம் அறிந்துகொள்ளப் போகும் சாதனையாளர் Sam Altman. உலகின் முன்னணி தொழில் முனைவோர்களில் ஒருவராக விளங்கும் இவர், செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) துறையில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியவர்களில் முக்கியமானவர். அவரது வாழ்க்கைப் பயணம் கடின உழைப்பு, தன்னம்பிக்கை மற்றும் விடாமுயற்சியின் சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளது.**



சாம் ஆல்ட்மன் 1985 ஏப்ரல் 22 அன்று அமெரிக்காவின் Chicago நகரில் பிறந்தார். பள்ளிப் படிப்பை முடித்த பிறகு, 2005 ஆம் ஆண்டு Stanford University-யில் கணினி அறிவியல் (Computer Science) படிப்பில் சேர்ந்தார். ஆனால் தனது கனவுகளை நோக்கி விரைவாக முன்னேற வேண்டும் என்ற எண்ணத்தால், முழுப் பட்டப்படிப்பை முடிக்காமல் கல்லூரியை விட்டு வெளியேறினார்.

இளம் வயதிலிருந்தே ஒரு சிறந்த தொழில் முனைவராக வேண்டும் என்ற இலக்கை வைத்திருந்தார். தனது 19-வது வயதில் "Loopt" என்ற நிறுவனத்தைத் தொடங்கினார். ஆரம்பத்தில் அவர் எதிர்பார்த்த அளவிற்கு வெற்றி கிடைக்கவில்லை. ஆனால் தோல்வியைக் கண்டு துவளாமல், புதிய திறன்களைக் கற்றுக்கொண்டு தொடர்ந்து கடினமாக உழைத்தார்.

பின்னர் உலகப் புகழ்பெற்ற தொடக்க நிறுவன வளர்ப்பு அமைப்பான Y Combinator-இல் முக்கியப் பொறுப்பை ஏற்று, ஆயிரக்கணக்கான இளைஞர் தொழில் முனைவோருக்கு வழிகாட்டியாக இருந்தார். பலரின் கனவுகளை நனவாக்குவதற்கும் உதவினார்.

அதன்பிறகு OpenAI நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியாக (CEO) பொறுப்பேற்றார். 2023 ஆம் ஆண்டில் அவர் அந்தப் பதவியிலிருந்து திடீரென நீக்கப்பட்டார். பல விமர்சனங்களையும் சவால்களையும் எதிர்கொண்ட அந்த நேரத்தில் கூட அவர் மனம் தளரவில்லை. சில நாட்களிலேயே மீண்டும் அதே பதவிக்குத் திரும்பினார்.

அவரது தலைமையின் கீழ் உருவாக்கப்பட்ட ChatGPT போன்ற செயற்கை நுண்ணறிவு கருவிகள் இன்று உலகம் முழுவதும் கோடிக்கணக்கான மக்களுக்கு உதவி செய்து வருகின்றன. கல்வி, ஆராய்ச்சி, தொழில் மற்றும் அன்றாட வாழ்க்கை என பல துறைகளில் AI பயன்பாட்டை விரிவுபடுத்துவதில் அவர் முக்கிய பங்கு வகித்துள்ளார்.




ஒரு கல்லூரி drop-out மாணவராகத் தொடங்கிய சாம் ஆல்ட்மன், இன்று உலகின் செல்வாக்கு மிக்க தொழில்நுட்பத் தலைவர்களில் ஒருவராக உயர்ந்துள்ளார். அவரது வாழ்க்கை, வெற்றிக்கு பட்டப்படிப்பு மட்டுமல்ல, விடாமுயற்சி மற்றும் தொடர்ச்சியான கற்றல்தான் முக்கியம் என்பதை நினைவூட்டுகிறது.

எனக்கன்பான வாலிபர்களே, நல்ல சிநேகிதன் என்பவன் உங்கள் சந்தோஷத்தில் மட்டும் பங்குபெறுபவன் அல்ல; ஒட்டுமொத்த உலகமே உங்களுக்கு எதிராக நிற்கும்போதும், உங்களுக்காக உங்களோடு கூட நிற்பவன்தான் நல்ல சிநேகிதன். இதை இயேசு ஒருவரால் மட்டுமே செய்ய முடியும்; வேறு யாராலும் முடியாது. "இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்" (மத். 28:20) என்று அவர் வாக்குத்தத்தம் அளித்துள்ளார்.

ஆகவே, வாழ்க்கையில் நல்ல நண்பர்களைத் தேர்ந்தெடுங்கள்; ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக, உங்கள் சிறந்த நண்பனாகிய இயேசுவோடு நெருக்கமான உறவை வளர்த்துக்கொள்ளுங்கள்.

REVIVAL IGNITERS
-LIVE-
ஆகஸ்ட் 30
(ஞாயிற்றுக்கிழமை)

ஒவ்வொரு மாதமும் திறப்பின் வாசலுக்கு (கடைசி சனி) அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணி முதல் 5.30 மணி வரை, இயேசு விடுவிக்கிறார் சமூக வலைத்தளங்கள் {YouTube (Jesus Redeems Official & Youth Trendz) மற்றும் Facebook} .வழியாக நேரலையில் பார்க்கலாம்..



இந்த நிகழ்ச்சியை உங்கள் நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள். அவர்களையும் இணைத்து, ஆவிக்குரிய புதுப்பொலிவை அனுபவிக்கச் செய்யுங்கள்.

## ஆசீர்வாத பெருவிழாக்கள்

# வாலிபர் எழுப்புதல் பெருவிழா

*தேவன் சகோதரர் மோகன் சி. லாசரஸ் அவர்களுக்குக் கொடுத்த தரிசனத்தின்படி, மே மாதம் 24-ஆம் தேதி முதல் 30-ஆம் தேதி வரை 7 நாட்கள் ஆசீர்வாத பெருவிழாக்களை நடத்த தேவன் கிருபை செய்தார். இந்த 7 நாட்களில் மொத்தம் 27 பெருவிழாக்கள் நடைபெற்றன. அவற்றில் தேவன் இயேசு விடுவிக்கிறார் ஊழியர்களை வல்லமையாகப் பயன்படுத்தினார். 17 பெருவிழாக்கள் தேவனுடைய கூடாரத்திலும், 5 வாலிபர் பெருவிழாக்கள் டேவிட் அரங்கத்திலும், 5 சிறுவர் பெருவிழாக்கள் மோசஸ் அரங்கத்திலும் நடைபெற்றன.*

**ஒவ்வொரு நாளும் வாலிபர் பெருவிழாவில் அநேக வாலிபர்கள் கலந்து கொண்டு ஆசீர்வாதம் பெற்றனர். முதல் நாள் 319 வாலிபர்கள் கலந்து கொண்டு கர்த்தருடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுச் சென்றனர். இரண்டாவது நாள் முதல் அதைவிட அதிகமான வாலிபர்கள் வரத் தொடங்கினர். ஐந்தாவது நாள் 633 வாலிபர்கள் கலந்து கொண்டனர்.**




வாலிபர் பெருவிழாக்களில் தேவன் தம்முடைய ஊழியர்களை வல்லமையாகப் பயன்படுத்தினார். முதல் நாள் ''வாலிபனே, நீ பெலவான்'' என்ற தலைப்பில் சகோதரர் அவினாஷ் அவர்களும், இரண்டாவது நாள் ''போராடித்தான் சுதந்தரிக்க வேண்டும்'' என்ற தலைப்பில் சகோதரர் சதீஷ் அவர்களும், மூன்றாவது நாள் ''காலத்தைப் பிரயோஜனப்படுத்து'' என்ற தலைப்பில் சகோதரர்



காலேப் அவர்களும், நான்காவது நாள் ‘‘வருகைக்கும் எழுப்புதலுக்கும் ஆயத்தப்படு; ஆயத்தப்படுத்து’’ என்ற தலைப்பில் சகோதரர் மோசஸ் அவர்களும், ஐந்தாவது நாள் ‘‘தீர்க்கதரிசன யுத்த சேனை’’ என்ற தலைப்பில் சகோதரர் அவினாஷ் அவர்களும் தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்து, ஜெபித்தார்கள்.

தேவன் வாலிபர்களைப் புதிய அபிஷேகத்தினால் நிரப்பி, தமது யுத்த சேனையாக அபிஷேகம் செய்து அனுப்பினார். அநேகர் முதல் முறையாகப் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்று, புதிய ஆவிக்குரிய அனுபவத்தோடு திரும்பிச் சென்றார்கள்.






விசேஷமாக, நான்காவது நாள் சகோதரர் மோகன் சி. லாசரஸ் அவர்கள் **“இயேசுவை உங்கள் நண்பனாக ஏற்றுக்கொள்ளுங்கள்”** என்ற தலைப்பில் தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்து, வாலிபர்களை ஜெபத்தில் நடத்தி, அவர்களை மிகுந்த உற்சாகப்படுத்தினார்கள்.

**தேவனுக்கே மகிமை உண்டாவதாக!**

தகவல்: ஜெனிபர்





# அறிவியலும் வேதாகமமும்

HI FRIENDS, எல்லாரும் எப்படி இருக்கீங்க?
நட்சத்திரங்களைப் பார்த்து எண்ணாதவர்கள், அவற்றை ரசிக்காதவர்கள் யாருமே இருக்க மாட்டார்கள். என்னங்க, நான் சொல்றது உண்மை தானே?
இந்த மாதம் நாம் "அறிவியலும் வேதாகமமும்" என்ற இந்தத் தொடரில் நட்சத்திரங்களைப் பற்றித்தான் பார்க்கப் போகிறோம். என்ன, ready-யா இருக்கீங்களா?
வாங்க, தொடருக்குள் போகலாம்!

## 1. நட்சத்திரங்கள் எதனால் ஆனவை?

நட்சத்திரங்கள் பெரும்பாலும் ஹைட்ரஜன் (Hydrogen) மற்றும் ஹீலியம் (Helium) வாயுக்களால் (Gases) ஆனவை. அவற்றின் மையத்தில் நடைபெறும் அணு இணைவு (Nuclear Fusion) காரணமாக மிகுந்த ஒளியையும் வெப்பத்தையும் வெளியிடுகின்றன.





## 2. சூரியனும் ஒரு நட்சத்திரமே

நாம் தினமும் காணும் சூரியன் ஒரு சாதாரண G-வகை மஞ்சள் நட்சத்திரம். அது பூமியிலிருந்து சுமார் 150 மில்லியன் கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது.

## 3. நமது அண்டத்தில் கோடிக்கணக்கான நட்சத்திரங்கள்

நாம் வாழும் Milky Way அண்டத்தில் மட்டும் 100 பில்லியனுக்கும் அதிகமான நட்சத்திரங்கள் இருப்பதாக விஞ்ஞானிகள் கணக்கிடுகின்றனர்.






## 4. நட்சத்திரங்களுக்கும் வாழ்க்கைச் சுழற்சி உண்டு

மனிதர்களைப் போலவே நட்சத்திரங்களுக்கும் வாழ்க்கைச் சுழற்சி உள்ளது. அவை வாயு மற்றும் தூசி மேகங்களில் உருவாகி, கோடிக்கணக்கான அல்லது பில்லியன் ஆண்டுகள் வாழ்ந்து, இறுதியில் வெடித்து அல்லது சுருங்கி முடிவடைகின்றன.

## 5. நட்சத்திரங்களின் நிறம் அவற்றின் வெப்பநிலையைக் காட்டுகிறது

- நீல நிற நட்சத்திரங்கள் – மிகவும் சூடானவை
- வெள்ளை நிற நட்சத்திரங்கள் – சூடானவை
- மஞ்சள் நிற நட்சத்திரங்கள் – நடுத்தர வெப்பமுடையவை (சூரியன்)
- சிவப்பு நிற நட்சத்திரங்கள் – குளிர்ச்சியானவை






## 6. சில நட்சத்திரங்கள் மிகப்பெரியவை

சில "சூப்பர் ஜெயண்ட்" (Supergiant) நட்சத்திரங்கள் சூரியனைவிட நூற்றுக்கணக்கான அல்லது ஆயிரக்கணக்கான மடங்கு பெரியதாக இருக்கலாம்.

## 7. நட்சத்திரங்களின் ஆயுட்காலம்

சிறிய நிறை கொண்ட நட்சத்திரங்கள் எரிபொருளை மெதுவாகப் பயன்படுத்துவதால் டிரில்லியன் ஆண்டுகள் வரை வாழ முடியும். ஆனால் பெரிய நட்சத்திரங்கள் சில மில்லியன் ஆண்டுகளிலேயே முடிவடைகின்றன.





## 8. சூப்பர்நோவா – மாபெரும் வெடிப்பு

நட்சத்திரங்கள் இறக்கும் போது "சூப்பர்நோவா" (Supernova) எனப்படும் மாபெரும் வெடிப்பை உருவாக்குகின்றன. இது பிரபஞ்சத்தின் மிகப்பெரிய வெடிப்புகளில் ஒன்றாகும். இந்த வெடிப்புகள் புதிய நட்சத்திரங்கள் மற்றும் கோள்கள் உருவாக உதவுகின்றன

## 9. நாம் பார்க்கும் சில நட்சத்திர ஒளி மிகவும் பழமையானது

ஒளி பயணம் செய்ய நேரம் எடுப்பதால், இன்று நாம் காணும் சில நட்சத்திரங்களின் ஒளி நூற்றுக்கணக்கான அல்லது ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு வெளியானதாக இருக்கலாம். அது ஏற்கனவே இறந்துபோன நட்சத்திரங்களின் ஒளியாகக் கூட இருக்கலாம்.



## சுவாரஸ்யமான உண்மை

ஒரு தெளிவான இரவில், மனிதக் கண்களால் சுமார் 2,000 முதல் 5,000 நட்சத்திரங்களை மட்டுமே காண முடியும். ஆனால் பிரபஞ்சத்தில் உள்ள நட்சத்திரங்களின் எண்ணிக்கை, பூமியின் அனைத்து கடற்கரைகளிலும் உள்ள மணல் துகள்களின் எண்ணிக்கையைவிட அதிகமாக இருக்கலாம் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

**"வானத்தை நோக்கி, நட்சத்திரங்களை எண்ண முடியுமானால் எண்ணிப்பார்." ஆதியாகமம் 15:5**

நட்சத்திரங்களை கண்டு நாம் பிரமிக்கிறோம் அல்லவா? தேவனால் படைக்கப்பட்ட நட்சத்திரங்களே இவ்வளவு பிரம்மாண்டமாக இருக்குமானால், நம் தேவன் எவ்வளவு மகிமையானவராய் இருப்பார் என்று எண்ணிப்பாருங்கள்!

**"அநேகரை நீதிக்குள்ளாகத் திருப்புகிறவர்கள் நட்சத்திரங்களைப்போல என்றென்றைக்கும் பிரகாசிப்பார்கள்." — தானியேல் 12:3**

பழங்காலத்தில் மாலுமிகள், பயணிகள் மற்றும் பாலைவனங்களில் பயணம் செய்தவர்கள் நட்சத்திரங்களைப் பார்த்து திசையறிந்து பயணம் செய்தனர். குறிப்பாக வட துருவ நட்சத்திரம் (Polaris), வட திசையைக் காட்ட உதவியது.

இயேசு பிறந்தபோது ஒரு விசேஷமான நட்சத்திரம் ஞானிகளை வழிநடத்தியது. அதுபோல, வாழ்க்கை என்ற பயணத்தில் பரிசுத்தமாக வாழ வழி தெரியாமல் இருளான காரியங்களில் தடுமாறிக்கொண்டிருக்கும் இளைஞர்களுக்கு, இயேசு என்னும் வழியை நாம் காண்பித்துக் கொடுக்க வேண்டும்.

இருளுக்கும் ஒளிக்கும் வித்தியாசம் உண்டாக்கவே நட்சத்திரங்கள் படைக்கப்பட்டன. அதுபோல நாமும் இருளான சூழ்நிலைகளில் ஒளியின் பிள்ளைகளாக வாழ்ந்து, பாவத்திற்கும் பரிசுத்தத்திற்கும் இடையேயான வித்தியாசத்தை வெளிப்படுத்துவோம்.

நட்சத்திரங்கள் இறந்துபோனாலும் அவற்றின் ஒளி தொடர்ந்து வீசிக்கொண்டே இருப்பதுபோல, நாம் பாவத்திற்கு மரித்தால் மட்டுமே பரிசுத்தம் என்னும் ஒளி நம்மிலிருந்து பிரகாசித்து, அநேகரை சத்தியத்தின் பாதைக்கு வழிநடத்தும்.

(ஆராய்ச்சி தொடரும்...)




## படித்துக் கொண்டே UPSC பயிற்சி எடுப்பது எப்படி?

**படிப்பையும்** (college/degree) **தொடர்ந்து கொண்டே**
UPSC (Union Public Service Commission) preparation **செய்வது சிரமம் தான்...**
**ஆனா சரியான** strategy **இருந்தா இது** totally possible.

### 1. Mindset சரி பண்ணுங்க

- Slow & steady approach வேண்டும்
- Consistency தான் முக்கியம் (daily 3–5 hrs போதும்)

### 2. Smart Time Management

**Weekday Plan (College days)**

- Morning (1–2 hrs) → NCERT / Standard book
- College time → free hours இருந்தா revision
- Evening (1 hr) → Newspaper (The Hindu / The Indian Express)
- Night (1–2 hrs) → Notes + revision
- Total: 3–5 hrs (consistent ஆக இருந்தா போதும்)



**Weekend Plan**

- 6–8 மணி நேரம் படிக்கவும்
- Weekly revision + mock test
- Weak areas correct பண்ணுங்கள்

### 3. Study Strategy

**Step 1:**

- தினமும் 1 subject மட்டும் focus
- Example: Monday → History, Tuesday → Polity

**Step 2:**

- Polity → Indian Polity by M. Laxmikanth
- History → India's Struggle for Independence by Bipan Chandra
- ஒரே book-ஐ repeat பண்ணுங்கள் (multiple sources வேண்டாம்)

### 4. Current Affairs Shortcut

- Newspaper + Monthly magazine (summary)
- Daily 1 மணி நேரம் போதும்
- Important points மட்டும் note எடுக்கவும்

### 5. Notes Strategy

- College + UPSC balance செய்ய
- Very short notes மட்டும்
- One page = one topic
- Revision-friendly format

### 6. Answer Writing

- Weekக்கு 2–3 answers எழுதுங்கள்
- Weekend ல practice செய்யலாம்

### 7. Revision Plan

- Sunday = full revision day
- "Read less, revise more"

### 8. Common Mistakes (avoid பண்ணுங்க)

- College studies ignore பண்ணுவது
- UPSC overload (10+ hours try பண்ணுவது)
- Burnout ஆகிற அளவுக்கு pressure எடுத்துக்கொள்வது

### Pro Tips (Real Success Hacks)

- College subjects + UPSC link பண்ணுங்கள்
- Travel time → current affairs revise
- நண்பர்கள் / WhatsApp distraction control



### Final Reality

- 2–3 years consistent preparation இருந்தா
- College முடியும் நேரத்துக்கு நீங்கள் UPSC-ready ஆகின்றீர்கள்

அடுத்த மாதம், வீட்டிலிருந்து மற்றும் ஹாஸ்டலில் இருந்து படிக்கிறவர்களுக்கு...

மிஷனெரி பயணம் : ரூத்

# மலைகளைத் தாண்டி வந்த சுவிசேஷம்



**1886-ஆம் ஆண்டு லண்டனில் பிறந்த ஜேம்ஸ் அவுட்ரம் ஃபிரேசரின் (James Outram Fraser) எதிர்காலம் மிகவும் பிரகாசமாக இருந்தது. இம்பீரியல் கல்லூரியில் பொறியியல் படித்த அவர், ஒரு சிறந்த பியானோ இசைக் கலைஞராகவும் இருந்தார். நல்ல வேலை, பெயர், புகழ், வசதியான வாழ்க்கை — இவை அனைத்தும் அவருக்காகக் காத்திருந்தன.**

ஆனால் தேவன் அவருக்காக வேறு ஒரு திட்டத்தை வைத்திருந்தார்.

ஜேம்ஸின் தாயார் ஆனி ஃபிரேசர், தனது பிள்ளைகளில் ஒருவர் மிஷனெரியாக வேண்டும் என்று பல ஆண்டுகளாக ஜெபித்து வந்தார். கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தபோது, ஹட்சன் டெய்லரின் வாழ்க்கை வரலாற்றைப் படித்த ஜேம்ஸ், தேவனுடைய அழைப்பைத் தனது இருதயத்தில் உணர்ந்தார். இறுதியாக, சீன மக்களுக்காகத் தனது வாழ்க்கையை அர்ப்பணிக்க முடிவு செய்தார்.

1908-ஆம் ஆண்டு, தனது 22-வது வயதில் சீனாவுக்குப் புறப்பட்டார். அங்கு சென்றவுடன், மக்களிடம் சுவிசேஷத்தைப் பகிர வேண்டுமென்றால் முதலில் அவர்களுடைய மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று முடிவு செய்தார். சந்தைகளில் மணிக்கணக்காக மக்களின் பேச்சைக் கேட்டார். புதிய வார்த்தைகளைக் கற்றுக்கொண்டார். தனிமை மற்றும் சோர்வு வந்தபோது, மலைகளுக்குச் சென்று ஜெபித்தார், தேவனைத் துதித்தார், வேதத்தை வாசித்தார்.

சில ஆண்டுகளுக்குப் பிறகு, சீனாவின் தென்மேற்குப் பகுதியில் வாழ்ந்த லீசு (Lisu) பழங்குடி மக்களைச் சந்தித்தார். அவர்களுடைய எளிமையும் அன்பும் ஜேம்ஸை மிகவும் கவர்ந்தது. அவர்களோடு வாழும் வாய்ப்பு கிடைத்தபோது, அவர்கள் சாப்பிட்ட உணவையே சாப்பிட்டார்; அவர்கள் வாழ்ந்த சூழலிலேயே வாழ்ந்தார்; அவர்களுடைய மொழியையும் கலாச்சாரத்தையும் கற்றுக்கொண்டார்.

ஆரம்பத்தில் ஊழியம் எளிதாக இருக்கவில்லை. மக்கள் ஆர்வமாகக் கேட்டாலும், பலர் மீண்டும் பழைய வாழ்க்கைக்குத் திரும்பிவிட்டனர். நோய்கள், எதிர்ப்புகள், சோதனைகள் என பல பிரச்சனைகள் வந்தன. ஆனால் ஜேம்ஸ் ஜெபத்தை மட்டும் கைவிடவில்லை. "உண்மையான ஊழியம் ஜெபத்தில் பிறக்கிறது" என்பதை உணர்ந்து, தொடர்ந்து தேவனைத் தேடினார்.

அவருடைய ஜெபமும் உழைப்பும் பலன் கொடுத்தது. 1913-ஆம் ஆண்டு, முதல் ஞானஸ்நான ஆராதனை நடைபெற்றது. அதன் பிறகு குடும்பம் குடும்பமாக மக்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ள ஆரம்பித்தனர். 1918-க்குள் 129 குடும்பங்களைச் சேர்ந்த 600-க்கும் மேற்பட்டோர் கிறிஸ்துவை தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்டனர்.

1929-ஆம் ஆண்டு, ராக்ஸி டைமண்ட் (Roxie Dymond) என்ற மிஷனெரி பெண்ணைத் திருமணம் செய்துகொண்டார். அவர்கள் தங்கள் இரண்டு மகள்களுடன் சேர்ந்து ஊழியத்தில் ஈடுபட்டனர். 1930-களில் லீசு மக்களிடையே பெரிய எழுப்புதல் ஏற்பட்டது. ஆயிரக்கணக்கானோர் இயேசுவை ஏற்றுக்கொண்டனர்.

1938-ஆம் ஆண்டு, தனது 52-வது வயதில் ஜேம்ஸ் ஃபிரேசர் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். ஆனால் அவர் விதைத்த சுவிசேஷ விதைகள் தொடர்ந்து பலன் கொடுத்துக்கொண்டே இருந்தன. இன்று சீனாவிலும் மியான்மரிலும் வாழும் இலட்சக்கணக்கான லீசு மக்கள் இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுகின்றனர்.



"சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவித்து, இரட்சிப்பைப் பிரசித்தப்படுத்துகிற சுவிசேஷகனுடைய பாதங்கள் மலைகளின்மேல் எவ்வளவு அழகாயிருக்கின்றன." — ஏசாயா 52:7

## ஜேம்ஸ் ஃபிரேசரின் ஊழியத்தின் சிறப்புகள்

* மக்களின் தாய்மொழியில் சுவிசேஷத்தை அறிவித்தார்.
* அடையப்படாத மக்களிடையே முன்னோடியாக ஊழியம் செய்தார்.
* மக்களை நேரில் சந்தித்து கிறிஸ்துவை அறிமுகப்படுத்தினார்.
* புதிய சபைகளை நிறுவி வளர்ச்சியடையச் செய்தார்.
* விசுவாசிகளை வேதாகம அடிப்படையில் பயிற்றுவித்தார்.
* வேதாகம மொழிபெயர்ப்புப் பணியில் பங்காற்றினார்.
* லீசு மக்களுக்கென எழுத்துமுறையை உருவாக்க உதவினார்.
* பாடல்கள் மூலம் வேதாகம சத்தியங்களை கற்றுக்கொடுத்தார்.
* உள்ளூர் தலைவர்களை உருவாக்கி ஊக்குவித்தார்.
* தன்னிறைவு பெற்ற சபைகள் உருவாக வழிநடத்தினார்.
* ஜெப இயக்கங்களை ஊக்குவித்தார்.
* எழுப்புதலுக்காக அர்ப்பணிப்புடன் உழைத்தார்.

கட்டிடங்களை உருவாக்கும் பொறியியலாளராக மாற நினைத்த ஒரு இளைஞனை, தேவன் ஒரு இனத்தின் ஆவிக்குரிய வரலாற்றை மாற்றும் கருவியாக மாற்றினார்.

அன்பான வாலிபர்களே, தேவன் உங்கள் படிப்பையோ, திறமையையோ, தொழிலையோ பயன்படுத்த விரும்பலாம். அல்லது ஒருவேளை வேறு ஒரு பாதைக்கு உங்களை அழைக்கலாம். எதுவாயினும், அவருடைய சித்தத்திற்கு உங்களை முழுமையாக ஒப்புக்கொடுங்கள்.

தேவனுடைய அழைப்புக்குக் கீழ்ப்படிந்த ஒரே ஒரு மனிதன், ஒரு முழு இனத்தின் எதிர்காலத்தையே மாற்ற முடியும். அதுபோல ஒவ்வொரு வாலிபனும் ஒரு கிராமத்தையோ, ஒரு மக்கள்கூட்டத்தையோ தத்தெடுத்து ஜெபத்தோடும் அர்ப்பணிப்போடும் செயல்பட்டால், நம் தேசத்தில் மகத்தான எழுப்புதலைக் காண முடியும்.

சிறப்புக் கட்டுரை : காலேப்



# உண்மையான நண்பன்

கடந்த நாட்களில் செய்திகளிலும் ஊடகங்களிலும் **Epstein Files** பற்றிய தகவல்கள் அதிகமாகப் பேசப்பட்டன. அதில் முக்கியமாக, ஒரு குறிப்பிட்ட நபருடன் பல உலகத் தலைவர்களும் பிரபலமான பணக்காரர்களும் பல்வேறு காரணங்களுக்காக தொடர்பில் இருந்ததாகக் கூறப்படுகிறது. அது, பலர் அவர்களைப் பற்றித் தீமையாகவும் அவமானமாகவும் பேசக் காரணமாக இருந்தது. இவை அனைத்திற்கும் ஒரு முக்கிய காரணம் தவறான நட்புதான்.

உலகப் பிரசித்திபெற்ற பணக்காரரான **Bill Gates,** நான்கு வருடங்கள் எப்ஸ்டீனுடன் பழகியதாகக் கூறப்பட்ட நிலையில், அவரிடம் இதுகுறித்து கேட்டபோது, ‘‘அவருடன் நான் செலவழித்த ஒவ்வொரு நிமிடத்தையும் குறித்து வருந்துகிறேன்... அது ஒரு பெரும் தவறு...’’ என்று கூறினார். அதுமட்டுமல்லாமல், அவருடன் சேர்ந்து செலவழித்த நேரங்களும், சொத்து மேலாண்மைக்காக வகுத்த திட்டங்களும் தோல்வியடைந்ததாகவே குறிப்பிட்டார். ஒரு தவறான நட்பு உலகத்தில் பல பிரமுகர்களை அவமானத்திற்கு உள்ளாக்கிவிட்டது இல்லையா?

இது கடைசிக்காலம். மனிதர்கள் தற்பிரியர்களாய், பணப்பிரியர்களாய், தூஷிக்கிறவர்களாய், பெற்றோருக்குக் கீழ்ப்படியாதவர்களாய், சுபாவ அன்பில்லாதவர்களாய், இச்சையடக்கமில்லாதவர்களாய், கொடுமையுள்ளவர்களாய், துணிகரமுள்ளவர்களாய் இருப்பார்கள் என்று வேதம் 2000 ஆண்டுகளுக்கு முன்பே சொல்லியிருக்கிறது (2 தீமோ. 3:1-5). ஆகவே, இப்படிப்பட்டவர்களிடமிருந்து விலகியிருங்கள்.

கடந்த ஜூன் மாதம், சிவகங்கை மாவட்டத்தில் 10-ஆம் வகுப்பு படிக்கும் மாணவன் ஒருவன், நீர்நிலை ஒன்றில் பலத்த காயங்களுடன் கண்டெடுக்கப்பட்டான். என்ன நடந்தது என்று விசாரித்தபோது, அவனுடைய மூத்த நண்பர்களுடன் ஏற்பட்ட சிறிய வாக்குவாதம் தகராறாக மாறி, அவர்கள் அவனைக் கொலைசெய்ததாகத் தகவல் கிடைத்தது.

பாருங்கள்! ஆபத்தில் நண்பன் உதவுவான் என்று வேதம் சொல்கிறது. ஆனால் இன்றோ, பல நேரங்களில் ஆபத்திற்கே நண்பர்கள்தான் காரணமாக இருக்கிறார்கள். தங்களைக்

காப்பாற்றிக்கொள்ளவும், தங்களுடைய இச்சைகளை நிறைவேற்றிக்கொள்ளவும், பிறரை ஆபத்தில் சிக்கவைத்து விட்டு ஓடுகிறவர்கள் மத்தியில்தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். சத்திய வேதம் இந்தக் காலத்தைக் ''கொடிய காலம்'' என்று அழைக்கிறது. உண்மைதானே?

பரமத் தகப்பனின் அன்பைத் தவிர, இந்த உலகத்தில் உள்ள அனைத்தும் நிலையற்றவை என்பதை உணர்ந்த இயேசு ஒரு உவமையைச் சொன்னார். லூக்கா 15-ல் வரும் இளைய குமாரன், தகப்பனின் அரவணைப்பை விட்டு நண்பர்களை நோக்கி ஓடுகிறான். முடிவில், அவர்கள் அவனைக் கெட்ட வழியில் நடத்தியது மட்டுமல்லாமல், எல்லாவற்றையும் இழந்தவனாகவும் குற்றுயிராகவும் விட்டுவிட்டார்கள். அவன் அவமானமடைந்து, குற்ற உணர்வினால் பாதிக்கப்பட்டு, தன்னையும் தன் வாழ்க்கையையும் வெறுத்தவனாய், பன்றி உண்ணும் தவிட்டின் முன் உட்காரும் நிலைக்குத் தள்ளப்பட்டான்.



நண்பர்களே! இந்த உலகம் அப்படித்தான். முதலில் கெட்ட வழியில் நடத்தும்; பின்னர் அவமானப்படுத்தும். ஏனென்றால், இது பொல்லாங்கனாகிய பிசாசின் அதிகாரத்திற்குள் இருக்கிறது (1 யோவான் 5:19). அவன் முதலில் குற்றம் செய்ய வைப்பான்; பின்னர் அதற்காகவே குற்றப்படுத்துவான்.

ஆனால், உண்மையான சிநேகம் ஒன்று இருக்கிறது. அதுதான் இயேசுவோடும், அவருடைய பிள்ளைகளோடும் நாம் வைத்திருக்கும் நட்பு.

உதாரணமாக, விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாம் ''தேவனுடைய சிநேகிதன்'' என்று அழைக்கப்பட்டார் (யாக். 2:23). இஸ்ரவேல் ஜனங்களை வழிநடத்திய மோசேயும் தேவனுடைய சிநேகிதனாக இருந்தார் (யாத். 33:11). இயேசு தனது சீஷர்களிடம், ''இனி நான் உங்களை ஊழியக்காரர் என்று சொல்லுகிறதில்லை... நான் உங்களைச் சிநேகிதர் என்றேன்'' என்று கூறினார்.

''இவர்கள் தவறு செய்யவில்லையா?'' என்று நீங்கள் யோசிக்கலாம். பலமுறை தவறினார்கள். ஆனால், தங்கள் தவறை உணர்ந்து மனந்திரும்பி, தேவனுக்குக் கீழ்ப்படிந்ததால், தாங்களாகவே தங்களை தேவனுடைய சிநேகிதர்கள் என்று சொல்லிக்கொள்ளவில்லை; தேவனே அவர்களை அப்படிக் கூறினார்.

தேவன் அவர்கள் செய்த தவறுகளைச் சொல்லி அவர்களைக் குற்றப்படுத்தவில்லை; அவமானப்படுத்தவும் இல்லை. ஏனெனில், அன்பு திரளான பாவங்களை மூடும். அன்பே உருவான தேவனும் உங்கள் தவறுகளை வெளிப்படுத்த விரும்புவதில்லை. அவருடைய அரவணைப்பிற்குள் ஓடிவந்தால், திரளான மன்னிப்பைப் பெறலாம்.

ஏனென்றால், அவர் சாதாரண நண்பன் அல்ல. நாம் நம்மையே நேசிக்க முடியாத நிலையில் இருந்தபோதும், நம்மை நேசித்து, நம்முடைய இடத்தில் நமக்காக அடிக்கப்பட்டவர். அவரை நேசிக்காமல் இருப்பதுதான் உண்மையான பாவம். அவ்வளவு பெரிய அன்பு கொண்டவர் நம் ஆத்தும நண்பனாகிய இயேசு!

இந்தக் கொடிய உலகத்தில் உண்மையான நண்பர்களைத் தேர்ந்தெடுப்பது கடினம்தான். ஆகவே, ''எனக்கு உண்மையான நண்பன் இல்லையே'' என்று வருத்தப்பட வேண்டாம்.

பந்தியில் சொல்ல முடியாவிட்டாலும், தன்னைக் காட்டிக்கொடுக்க வந்த யூதாசை நோக்கி இயேசு, ''நண்பனே'' என்றே அழைத்தார். பிறரை நேசிக்காமல், அவர்கள் தவறு செய்கிறார்கள் என்று குற்றப்படுத்திக்கொண்டே இருப்பதும் தவறுதான்.

ஆகையால், முடிந்தவரை துஷ்டனையும் தனக்கு இஷ்டனாக மாற்ற வந்த இயேசுவைப் போல, நாமும் அநேகருக்கு உண்மையான நண்பர்களாக இருப்போம். முடியாவிட்டால், கெட்ட நண்பர்களை விட்டு விலகி இருப்போம் (நீதி. 24:1).

**உலகத்தையே ஆதாயப்படுத்திக்கொண்டு, நம் ஆத்துமாவை நஷ்டப்படுத்தினால் அதில் எந்த லாபமும் இல்லை.**

**எனவே, ஒவ்வொரு நிமிடமும் ஜாக்கிரதையாக இருந்து நண்பர்களைத் தேர்ந்தெடுங்கள். புறாக்களைப் போல கபடற்றவர்களாகவும், சர்ப்பங்களைப் போல விவேகமுள்ளவர்களாகவும் இருங்கள். இயேசுவே இறுதிவரை நம் உண்மையான சிநேகிதன்.**

A real friend moves with you in love, when the world leaves you.
A real friend corrects you with kindness, when others condemn you.




வாலிபர்கள் தங்களுடைய
ஆவிக்குரிய வாழ்வில் அனல்
கொண்டு எழும்பவும்,
வேதத்தின் ஆழமான
இரகசியங்களை அறியவும்,
தங்கள் தேசத்திற்காய் கூடி
ஜெபித்து பெலப்படும் ஓர்
இடமாகவும் IGNITERS
கூடுகை அமைகிறது. நீங்களும்
இக்கூடுகையில் பங்குபெற்று
பெலன் அடையலாமே!
உன்னை பெலப்படுத்திக்
கொண்டு, பிறரையும்
பெலப்படுத்த
**ஆயத்தப்படு!**
**ஆயத்தப்படுத்து!**

## EVERY 1ST SUNDAY [2ND AUGUST]

### MUMBAI – DHARAVI (5PM – 7:30PM)
World Revival Prayer Centre, 2nd Floor, Above Balakrishna Farsan Mart, Opp. Apna Restaurant, Near Kamarajar School, 90 Feet Road,
9004882470

### VELLORE (3PM)
World Revival Prayer Centre,
Ajantha Mahal,
# 3, 6th West Cross Road,
Gandhi Nagar
9442885315 | 9442979556

### TIRUPUR (4PM – 6:30PM)
World Revival Prayer Centre,
#62, 2nd Floor,
Benny Kumaran Main Road.
9442885315

### TUTICORIN (3PM – 5:30PM)
World Revival Prayer Centre, Jehovah Jireh Towers, 51/8D/3, 1st Floor, Tiruchendur Road,
Muniasamypuram
Land mark: South Police Station to Kamaraj College Rd.
9750955548 | 9786212103

### TIRUPATI (3PM)
World Revival Prayer Centre,
Unlimited Show Room (Opp.)
7989295442 | 9488938305

## EVERY 2ND SUNDAY [9TH AUGUST]

### BANGALORE (3PM-5PM)
World Revival Prayer Centre,
57/2 Thomasappa layout (Opp)
Lumbini Garden Bus Stand Outer Ring Road, Veerannapalaya
(Nagavara)
9791444788 | 080 35 45 45

### SANKARANKOIL (2:30PM – 5PM)
World Revival Prayer Centre,
Sekihnah Mahal, Mullai Nagar.
9750955548 | 8344949555

### AMBUR (3PM-6PM)
Concordia Hr.Sec. School,
Opp Rly.Station
9597927799 | 9442885315

### MULUND (5PM - 7:30PM)
Shekinah NLA Church,
Vijay Nagar, Near Vani Vidyalaya School, Mulund-West
9004882470

### THANJAVUR (3PM)
World Revival Prayer Centre,
Near Balaji Nagar Bus Stop,
18B, TPS Nagar, MC Road
9489775075 | 9444381971

### KOVILPATTI (2:30PM -5:30PM)
St. Paul's Matriculation School
(Parking area Building)
9677858766 | 9787322334

### ALANGULAM (2:30PM)
D. No. 5/2, Vaanjinathan Street,
North side of TPV Mill,
Thuththikulam Road,
9750955548 | 9965377427

### THENI (2:30PM – 5PM)
World Revival Prayer Centre,
#203, Madurai Road,
Opp. Anantham Silk, Dr. Kamaraj Hospital, 1st Floor
9750955548 | 9976766422

### SURANDAI (2:00PM)
Jawaharlal Middle School
9443962141 | 9750955548

### SATHANKULAM (3PM -5:30PM)
Hendry Matric Higher Secondary School, Mela Sathankulam.
9442885315 | 9786212103

**CHENGALPET (3PM – 5:30PM)**
Reheboth Church,
Near old bus stand,
9710809626 |9488475315

**NAMAKKAL (3PM -5:30PM)**
World Revival Prayer Centre,
16B Naveen Nest Apartment,
Podhigai Nagar, 1st street,
Salem Road, Namakkal-637001
9962085523 | 94886 18305

**POLLACHI (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
Grace Auto, 1st floor,
163, Raja mill road, Pollachi,
9486037586 | 9487856205

**VILLUPURAM (3PM – 5:30PM)**
World Revival Prayer Centre,
HH Complex, Namnadu Textiles,
Opp., Shanthi Theater Rd
8870517324 | 834411022

**ERODE (4PM – 6:30PM)**
World Revival Prayer Centre,
#216, 1st Floor,
Near Fire Service, Gandhiji Road
9750722000

## EVERY 3RD SATURDAY (15TH AUGUST)

**MYSORE (3:30PM - 6PM)**
World Revival Prayer Center,
3818, 14th Cross, St. Mary's Road,
FTS Circle, N.R. Mohalla.
9962085523 | 9886311777

## EVERY 3RD SUNDAY (16TH AUGUST)

**SALEM (3PM - 6PM)**
Karunya Prayer Hall,
76/67, Near Thinathanthi office,
opp. Gandhi Stadium, Arisipalayam
9962085523

**TIRUNELVELI (2:30 PM)**
World Revival Prayer Centre,
Shah Complex, #43/R4,
Rajendra Nagar, Trivandrum Road
9750955548 | 9047480484

**SIVAKASI (3PM -5PM)**
World Revival Prayer Centre,
HOREB Complex,
1st Floor, P K N Road,
(Near Rathna vilas Bus Stop)
9677858766 | 9442906567

**TIRUPORUR (3 PM - 6 PM )**
Come compassion Centre,
Mettuthandalam, Tiruporur.
9710809626

**COIMBATORE (4 PM)**
World Revival Prayer Centre,
#90, 1st Floor, Arts College Road,
Near Charan Tower,
9894399599 | 9442885315

**TRICHY (3 PM)**
World Revival Prayer Centre,
22A, 1st Floor,
Thennur High Road,
Near KMC Bus Stop, Thennur.
9489775075 | 8344119000

**CHENNAI (3 PM)**
World Revival Prayer Centre,
Prince Kushal Towers,
7th Floor B-Wing,
Adjacent to LIC Metro,
Mount Road,
9488475315

**JEBAMALAI (2 PM)**
Keelamathapuram, Kadaiyam (via),
Tenkasi Dist.
8300131000 | 9750955548

**TIRUVARUR (3:30PM)**
World Revival Prayer Centre,
1S.A. Rice Mill Complex,
TTP Main Rd,
9976766322 | 7373374733

**RANIPET (3PM-6PM)**
World Revival Prayer Centre,
Railway Station Road,
Zion Nagar,
Near Scudder Memorial Hospital
9500283179

**NAGERCOIL (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
NO: 1055 K.P ROAD,
Milk Depot Junction, Nagercoil
7598155503 | 9750955548

**PONDICHERRY (5PM TO 7PM)**
World Revival Prayer Centre,
Kottupalayam Lawspet,
opp. Latha Steel, E C R Road.
8344433800 | 9962085523

**CHITTOOR (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
Kamlambal Street, Readspet,
Kangareddy palli,
9487734603

**DELHI (3 PM TO 5 PM)**
World Revival Prayer Centre,
Plot 152, Pratap Nagar
Near Hari Nagar bus depot
New Delhi - 110064
7217663240

## EVERY 4TH SUNDAY (24TH AUGUST)

**THIRUVALLUR (3PM -5:30PM)**
World Revival Prayer Centre,
H S R Tower,
2nd Floor, Near CSI Gowdi Church
9488475315

**KARUR (3PM-5:30PM)**
CSI Boys High schools,
Jawahar Bazzar, Bunglaw Street, Karur.
9489775075

**MUMBAI-MALAD (4PM – 6PM)**
Bethel Ground Floor,
305/E, Mith Chauky,
Marve Road, Malad (W)
9664050567 | 9619996976

**PERNAMPET (3PM TO 6PM)**
Revival Prayer centre, VK Road.
9442885315

**THISAYANVILAI (2:30PM - 5:30PM)**
World Revival Prayer Centre,
Near ML Hospital, Thisayanvilai.
9487810845 | 9750955548

**MADURAI (3PM -5:30PM)**
Devanukae Mahimai Church,
Nearby MGM Plaza,
[Theekadir Busstop] 41, K.Salai pudur
Byepass Road, Madurai
9750955548

**உங்கள் பகுதியில் நடைபெறும் Fellowshipல் தவறாமல் கலந்து கொள்ளுங்கள்; எழுப்புதலைப் பற்ற வைப்போர்களாய் மாறுங்கள்!**

ஜெபிக்கலாம் வாங்க!

ஆகஸ்ட் 2026

ஜெபம் : ரோனி

# சிறு குறு தொழில் செய்பவர்களுக்காக

**புள்ளிவிவரங்கள்:** ▸ இந்தியாவின் தொழிற்துறை உற்பத்தியில் சுமார் 40% பங்கும், நாட்டின் மொத்த ஏற்றுமதியில் சுமார் 50% பங்கும் **SSI/MSME** துறைக்கு உரியது.

▸ நாட்டின் வேலைவாய்ப்பு உருவாக்கத்திலும் பொருளாதார வளர்ச்சியிலும் இத்துறை முக்கிய பங்கு வகிக்கிறது.

▸ ஆடைத் தயாரிப்பு அலகுகள், பேக்கரி தொழில்கள், சிறு உணவு உற்பத்தி நிறுவனங்கள், மரச்சாமான் தயாரிப்பு பணிமனைகள் மற்றும் கைத்தொழில் **(Handicrafts)** நிறுவனங்கள் போன்றவை **SSI** துறையின் முக்கிய எடுத்துக்காட்டுகளாகும்.

## ஜெபக்குறிப்புகள்:



▸ சிறு குறு தொழில்முனைவோர் தங்கள் தொழில்களை விரிவுபடுத்தத் தேவையான கடன் மற்றும் நிதி உதவிகளை சரியான நேரத்தில் பெற ஜெபிப்போம்.

▸ மூலப்பொருட்களின் விலை உயர்வு, பணப்புழக்கத் தாமதம் போன்ற நிதிச் சுமைகள் தொழில் வளர்ச்சிக்குத் தடையாக அமையாதபடி ஜெபிப்போம்.

▸ சிறு தொழில்கள் அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்கி, சமூகத்தின் பொருளாதார மேம்பாட்டிற்கு ஆசீர்வாதமாக இருக்க ஜெபிப்போம்.

▸ பெரிய நிறுவனங்கள் இவர்களின் உழைப்பைப் பயன்படுத்தி சுரண்டாதபடி, தேவன் அவர்களைப் பாதுகாத்து, அவர்களின் உழைப்பிற்கேற்ற பலனை அருளிச்செய்ய ஜெபிப்போம்.

# இந்தியாவின் பழங்குடியின மக்களுக்காக

**புள்ளிவிவரங்கள்:** ▸ 10.4 கோடி மக்கள்: இந்தியாவின் மொத்த மக்கள் தொகையில் 8.6%. உலகிலேயே அதிக பழங்குடியின மக்கள் வாழும் நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும்.

▸ 45.3% வறுமை: கிராமப்புற பழங்குடியின மக்களில் பெரும்பாலானோர் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்கின்றனர்.

▸ 59% படிப்பறிவு: தேசிய சராசரியை விடக் குறைவான கல்வியறிவு நிலை காணப்படுகிறது.

## ஜெபக்குறிப்புகள்:

▸ இந்தியாவின் பூர்வகுடி மக்களின் பூர்வீக நிலங்கள், சுரங்கங்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்காகப் பறிக்கப்படாமல், அவர்களின் நில உரிமைகளும் வாழ்வாதாரமும் பாதுகாக்கப்பட ஜெபிப்போம்.

▸ பரம்பரையாக நீடித்து வரும் வறுமை மற்றும் கடன் சுமைகளிலிருந்து அவர்கள் விடுதலை பெற்று, கௌரவமான வேலைவாய்ப்பும் பொருளாதார சுதந்திரமும் பெற ஜெபிப்போம்.

▸ தொலைதூர கிராமங்களில் வாழும் பழங்குடியினக் குழந்தைகள் மற்றும் தாய்மார்களைப் பாதிக்கும் ஊட்டச்சத்துக் குறைபாடு நீங்கி, தூய்மையான குடிநீர் மற்றும் அடிப்படை மருத்துவ வசதிகள் கிடைக்க ஜெபிப்போம்.

▸ பழங்குடியினக் குழந்தைகள் தங்கள் தாய்மொழியிலேயே கல்வி கற்று, அவர்களின் பண்பாட்டை மதிக்கும் தரமான கல்வி கிராமங்களிலேயே கிடைக்க ஜெபிப்போம்.



# பஞ்சத்தால் உலக நாடுகள் பாதிக்கப்படாதபடிக்கு

**புள்ளிவிவரங்கள்:** ▸ உலகளாவிய உணவு நெருக்கடிகளில் பெரும்பாலானவற்றிற்கு போர்களும் வன்முறை மோதல்களும் முக்கிய காரணமாக உள்ளன.

▸ யூரியா உள்ளிட்ட உரங்களின் விலை உயர்வு உலகளவில் விவசாய உற்பத்தியைப் பாதித்துள்ளது.

▸ பருவநிலை மாற்றம் மற்றும் உணவுப் போக்குவரத்து தடைகள் காரணமாக பல உலகப் பகுதிகள் உணவுப் பற்றாக்குறையை எதிர்கொண்டு வருகின்றன.

▸ சர்வதேச நிதி உதவிகள் குறைவதால், உணவு நெருக்கடிகளுக்கான நீண்டகால தீர்வுகளை செயல்படுத்துவதில் சிரமங்கள் ஏற்படுகின்றன.

## ஜெபக்குறிப்புகள்:

▸ நாடுகளுக்கிடையே நடைபெறும் யுத்தங்கள் ஓய்ந்து, கர்த்தர் சமாதானத்தை அருளி, உணவுப் பொருட்கள் எளிய மக்களைத் தடையின்றி சென்றடைய ஜெபிப்போம்.

▸ பருவநிலை மாற்றம், கடுமையான வறட்சி மற்றும் விளைச்சல் குறைவு போன்ற நிலைகள் மாறி, கர்த்தர் பூமியின் மேல் இரக்கமாய் மழையை அருள ஜெபிப்போம்.

▸ விலைவாசி உயர்வால் பாதிக்கப்படும் ஏழை எளிய மக்கள் பாதுகாக்கப்பட்டு, விவசாயப் பொருட்கள் மற்றும் உரங்களின் விலைகள் குறைந்து, பஞ்சம் நீங்க ஜெபிப்போம்.

▸ உலகத் தலைவர்கள் சுயநலமின்றி செயல்பட்டு, உணவுப் பஞ்சத்தை எதிர்கொள்ளவும், பசியால் வாடுவோருக்குத் தேவையான உதவிகளை வழங்கவும் தெய்வீக ஞானம் பெற ஜெபிப்போம்.



# கடைசிக்காலத்தில் வாலிபர்கள் மோசம்போய்விடாதபடிக்கு



**புள்ளிவிவரங்கள்:** ▸ பள்ளிப் படிப்பைத் தவிர்த்து, பொழுதுபோக்கிற்காக ஒரு சராசரி வாலிபன் தினமும் பல மணி நேரங்களை மொபைல் மற்றும் திரைகளில் செலவிடுகிறான்.

▸ இளைஞர்களில் கணிசமானோர் ஆன்லைன் வழியாகத் தங்கள் நண்பர்களுடன் தொடர்ந்து தொடர்பில் இருக்கிறார்கள்.

▸ போதைப்பொருள் பயன்பாடு மற்றும் மதுப்பழக்கம் வாலிபர்களிடையே அதிகரித்து வருவது கவலைக்குரியதாக உள்ளது.

▸ பள்ளிப் பருவத்திலேயே பல இளைஞர்கள் மதுப்பழக்கம் மற்றும் பிற தீய பழக்கங்களுக்கு ஆளாகின்றனர்.

## ஜெபக்குறிப்புகள்:

▸ வாலிபர்களிடையே போதைப்பொருட்கள், மது மற்றும் வேப்பிங் (Vaping) சாதாரணமாக மாறிவருவதைத் தடுத்து, அவர்களைப் பாழாக்கும் சாத்தானின் பிடி உடைய ஜெபிப்போம்.

▸ தனிமை, மனச்சோர்வு மற்றும் ஏமாற்றத்தால் உருவாகும் உள்ளத்தின் வெறுமை, தற்காலிக இன்பங்களால் அல்லாமல் தேவனுடைய அன்பால் நிரப்பப்பட ஜெபிப்போம்.

▸ இணையதளம் மற்றும் மொபைல் மாயையிலிருந்து இளைஞர்கள் விடுபட்டு, சாத்தானின் தந்திரங்களை எதிர்க்கும் தெளிந்த புத்தியையும் சுயக்கட்டுப்பாட்டையும் பெற ஜெபிப்போம்.

▸ வாலிபர்கள் அந்திக்கிறிஸ்துவின் ஆவிக்கும் உலகப் போக்கிற்கும் விலகி, தேவனுடைய சத்தியத்தை அறிந்துகொள்ளவும், ஒரு பரிசுத்த சந்ததி எழும்பவும் ஜெபிப்போம்.

# வேதாகம களஞ்சியம்

வேத ஆராய்ச்சி : ஜோயல்

## யோபு

இந்தப் புத்தகம், "நீதிமான்கள் ஏன் துன்பப்படுகிறார்கள்?" என்ற ஆழமான கேள்விக்குப் பதிலளிக்கிறது. தேவனுடைய ஞானமும், அவருடைய நோக்கங்களும் மனித அறிவுக்கு அப்பாற்பட்டவை என்பதே இதன் மையக்கருத்தாகும்.

## முக்கிய நபர்கள்

- யோபு
- யோபுவின் நண்பர்கள் – எலிப்பாஸ், பில்தாத், சோப்பார்
- எலிகூ (தேவனுடைய நீதியைப் பற்றி பேசும் ஒரு வாலிபன்)

## முக்கிய நிகழ்வுகள்

- சாத்தான் யோபுவின் விசுவாசத்தைச் சோதிக்கிறான்.
- யோபு தனது பிள்ளைகள், செல்வம் மற்றும் உடல்நலத்தை இழக்கிறார்.
- யோபுவின் நண்பர்கள், "துன்பம் என்பது தனிப்பட்ட பாவத்தின் விளைவு" என்று தவறாகக் குற்றஞ்சாட்டுகிறார்கள்.
- தேவன் பெருங்காற்றிலிருந்து யோபுவிடம் பேசுகிறார்.
- யோபு, "என் தேவன் சகலத்தையும் செய்யும் சர்வவல்லவர்" என்பதை உணர்ந்து, தாழ்மையுடன் தேவன் மீது முழு நம்பிக்கையை வைக்கிறார்.
- தேவன் யோபுவுக்கு அவர் இழந்த அனைத்தையும் இரட்டிப்பாகத் திரும்பக் கொடுத்து ஆசீர்வதிக்கிறார்.

## முக்கியக் கருத்து

வாழ்க்கை நமக்குப் புரியாத பாதைகளில் நம்மை நடத்தினாலும், தேவனை முழு நிச்சயத்துடன் நம்புகிறவர்கள் இறுதியில் அவருடைய நன்மையையும் ஆசீர்வாதத்தையும் அனுபவிப்பார்கள்.

| ஆசிரியர் | எண்ணிக்கை | சங்கீதங்கள் |
|---|---|---|
| தாவீது | 73 (பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது) | சங். 3-9, 11-32, 34-41, 51-65, 68-70, 86, 101, 103, 108-110, 122, 124, 131, 133, 138-145 |
| ஆசாப் | 12 | சங். 50, 73-83 |
| கோராகின் குமாரர் | 11 | சங். 42-49, 84, 85, 87, 88 |
| சாலொமோன் | 2 | சங். 72, 127 |
| மோசே | 1 | சங்கீதம் 90 |
| எஸ்ராகியனாகிய ஏமான் | 1 | சங்கீதம் 88 |
| எஸ்ராகியனாகிய ஏத்தான் | 1 | சங்கீதம் 89 |
| பெயர் குறிப்பிடப்படாத ஆசிரியர்கள் | சுமார் 50 | சங். 1, 2, 10, 33, 43, 66, 67, 71, 91-100, 102, 104-107, 111-121, 123, 125-130, 132, 134-137, 146-150 |

## நீதிமொழிகள் ஆசிரியர்கள்

| | | |
|---|---|---|
| சாலொமோன் – நீதிமொழிகள் 1–29 | அகூர் – நீதிமொழிகள் 30 | லேமுவேல் ராஜா – நீதிமொழிகள் 31 |

## முக்கியக் கருப்பொருள்கள்

- ஞானமும் மதியீனமும்
- தேவபக்தியும் தெய்வீகப் பண்புகளும்
- நீதியும் நியாயமும்
- குடும்ப உறவுகள்
- பிள்ளைகளை வளர்த்தல்
- சுயக்கட்டுப்பாடு
- ஞானமுள்ள பேச்சுக்கும் முட்டாள்தனமான பேச்சுக்கும் உள்ள வேறுபாடு
- செல்வமும் வறுமையும்
- சுறுசுறுப்பும் சோம்பலும்
- நல்ல நண்பர்களைத் தேர்ந்தெடுத்தல்
- ஒவ்வொரு செயலிலும் அவசியமான நற்பண்புகள்
- பொருளாதார நிர்வாகம்
- குணசாலியான பெண்ணின் பண்புகள்

புதிர் : பிரபா

# வேதாகம புதையல் வேட்டை

**கீழே நண்பர்கள் சம்மந்தம்மான கேள்விகள் கேட்கப்பட்டுள்ளது. அதற்கான விடைகள் வேத ஆதாரத்துடன் எழுதி அனுப்பவும்.**

1.எவர்களுடைய  நட்பு தேவனை மையமாகக் கொண்டிருந்ததை காட்டுகிறது?

2.ஒரு பெரிய பிரச்சினையை எதிர்கொண்டபோது, தனது நண்பர்களிடம் சென்று தேவனிடத்தில் ஜெபிக்கும்படி கேட்டவன் யார்?

3.சோதனை மத்தியிலும் ஒற்றுமையாய் இருந்தவர்கள் யார் ?


4.விசுவாசத்தினால் தேவனுடைய சிநேகிதன் என்று அழைக்கப்பட்டவன் யார் ?

5.தேவனுடைய சிநேகிதனின் உண்மையான நட்பு எதில் கட்டப்பட்டிருந்தது ?

6.தன் ஆத்துமாவைப்போல சிநேகித்ததினால்  அவனும் இவனும் உடன்படிக்கை பண்ணிக்கொண்டார்கள் ?

7.நண்பர்களாகவும் தேவனுடைய பணியில் இணைந்து உழைத்தவர்களாகவும் இருந்தவர்கள் யார் ?

8. முதல் மிஷனரி பயணத்திலும் அவர்கள் ஒன்றாகச் சென்றார்கள் யார் அவர்கள் ?




கடந்த மாத வெற்றியாளர்
ஈனோக்கு, திருநெல்வேலி
அவர்களை வாழ்த்துகிறோம்.

பதில் வந்து சேர வேண்டிய கடைசி நாள்

**15.08.2026**

## கடந்த மாத விடைகள்

01 . மேன்மை x தாழ்மை (நீதி. 18: 12)
02. காத்துக்கொள்ளுகிறவன் x இழந்துபோகிறவன் (மத்.10:39)
03. முந்தினோர் x பிந்தினோர் (மத். 20:16)
04.ஆசீர்வாதம் x சாபம் (உபா. 30:19)
05. மதியீனம் x ஞானம் (பிரசங்கி. 2:13)
06. தீமை x நன்மை (ஆதி. 2:17, ஏசா. 5:20, ரோமர் 12:21)
07. மெய் x பொய் (எபே. 4:25)
08. அந்தம் x ஆதி (வெளி. 1:8)
09. சிங்காரம் x சாம்பல் (ஏசா. 61:3)
10. பிரிவினை x ஏகமனது (1 கொரி. 1:10)

Jesus Redeems Youth Ministries, Nalumavadi, Thoothukudi Dist - 628 211.
Cell: 9750955547 | Tel: 04639- 353535. eMail: youth@jesusredeems.org

# செய்திகள்!

## ஜூன் மாத ஜிஎஸ்டி வசூல் ரூ.1.95 லட்சம் கோடி:

**14 சதவீதம் அதிகரிப்பு உள்நாட்டு பரிவர்த்தனைகளில் இருந்து கிடைத்த வருவாய் மிதமான அளவில் உயர்ந்திருந்தாலும், இறக்குமதி மீதான ஜிஎஸ்டி வசூலில் ஏற்பட்ட அதிகரிப்பே மொத்த வசூல் உயர்வுக்கு முக்கியக் காரணமாக அமைந்துள்ளது.**




நாட்டில் ஜூன் மாதத்திற்கான மொத்த சரக்கு மற்றும் சேவை வரி (GST) வசூல் ரூ.1,94,812 கோடியாக உயர்ந்துள்ளது. இது கடந்த ஆண்டு இதே மாதத்துடன் ஒப்பிடுகையில் 13.9 சதவீதம் அதிகமாகும்.

கடந்த மாத வசூல் விவரங்களைப் பார்க்கும்போது, ஜிஎஸ்டி வசூல் ரூ.2 லட்சம் கோடி என்ற இலக்கை நெருங்கியுள்ளது. இந்த உயர்வுக்கு, இறக்குமதி மீதான ஜிஎஸ்டி வசூலில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கியக் காரணமாக அமைந்துள்ளது. உள்நாட்டு பரிவர்த்தனைகளில் இருந்து கிடைத்த வருவாய் மிதமான அளவில் உயர்ந்திருந்தாலும், இறக்குமதி வரி வசூல் அதனை ஈடுகட்டியுள்ளது. உள்நாட்டு பரிவர்த்தனைகள் மூலம் கிடைத்த மொத்த ஜிஎஸ்டி வருவாய் ரூ.1,34,774 கோடியாக இருந்தது. இது கடந்த ஆண்டு ஜூன் மாதத்துடன் ஒப்பிடுகையில் 6.5 சதவீதம் அதிகமாகும்.

அதேநேரத்தில், இறக்குமதி மீதான ஜிஎஸ்டி வசூல் 34.6 சதவீதம் உயர்ந்து ரூ.60,038 கோடியாக பதிவாகியுள்ளது. மொத்த ஜிஎஸ்டி வசூல் அதிகரிப்பில் இதுவே மிகப்பெரிய பங்களிப்பை வழங்கியுள்ளது. மாநிலங்களைப் பொறுத்தவரை, உத்தரப் பிரதேசம் ஜூன் மாதத்தில் 19 சதவீத வளர்ச்சியுடன் முதலிடத்தில் உள்ளது. அங்கு ஜிஎஸ்டி வசூல் ரூ.7,675 கோடியிலிருந்து ரூ.9,165 கோடியாக உயர்ந்துள்ளது. அசாம் (17%), பஞ்சாப் (14%), மற்றும் குஜராத் (12%) ஆகிய மாநிலங்களும் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் கண்டுள்ளன.நாட்டின் மிகப்பெரிய ஜிஎஸ்டி பங்களிப்பாளரான மகாராஷ்டிராவில் வரி வசூல் 9 சதவீதம் அதிகரித்து ரூ.30,714 கோடியை எட்டியுள்ளது. கர்நாடகாவில் 10 சதவீதமும், டெல்லியில் 8 சதவீதமும் வளர்ச்சி பதிவாகியுள்ளது. - **தினத்தந்தி, ஜூலை 1, 2026.**

## இந்தியாவின் வெளிநாட்டுக் கடன் ரூ.72 லட்சம் கோடியாக அதிகரிப்பு:

## ஆர்.பி.ஐ. தகவல்

இந்தியப் பொருளாதாரம் வேகமாக வளர்ந்து வரும் நிலையில், நாட்டின் வெளிநாட்டுக் கடன் தொடர்பான புதிய தரவுகளை இந்திய ரிசர்வ் வங்கி (RBI) வெளியிட்டுள்ளது. அதன்படி, இந்தியாவின் வெளிநாட்டுக் கடன் ரூ.72.15 லட்சம் கோடியாக (762.8 பில்லியன் அமெரிக்க டாலர்) உயர்ந்துள்ளது. அமெரிக்க டாலரின் மதிப்பு உயர்ந்ததன் காரணமாக இந்திய ரூபாயின் மதிப்பு பாதிக்கப்பட்டதாகவும், இதன் விளைவாக நடப்பாண்டு மார்ச் மாத இறுதியில் இந்தியாவின் வெளிநாட்டுக் கடன் ரூ.72.15 லட்சம் கோடியாக அதிகரித்துள்ளதாகவும் ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது. இது, கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 26.3 பில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு கடன் அதிகரித்திருப்பதைக் குறிக்கிறது. இந்த உயர்வுக்கு, அரசு சார்ந்த கடன்களைவிட தனியார் துறை சார்ந்த கடன்களே முக்கியக் காரணம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் (GDP) ஒப்பிடுகையில் வெளிநாட்டுக் கடனின் அளவும் உயர்ந்துள்ளது. இந்தியாவின் வெளிநாட்டுக் கடன்–மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் (External Debt-to-GDP Ratio), ஓராண்டுக்கு முன்பு இருந்த 19.8 சதவீதத்திலிருந்து 20.8 சதவீதமாக உயர்ந்துள்ளது. இதற்கிடையில், இந்தியாவின் குறுகிய கால வெளிநாட்டுக் கடன் சற்று அதிகரித்திருந்தாலும், நாட்டின் வலுவான அந்நியச் செலாவணி இருப்பு (Foreign Exchange Reserves) காரணமாக, இந்தக் கடன் அளவு கட்டுக்குள் இருப்பதாக பொருளாதார நிபுணர்கள் கருதுகின்றனர். - **தினகரன், ஜூன் 1, 2026.**

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakhsmipuram, Nalumavadi - 628 211

# சுதந்திர தினம்



**சுபாஷ்:** நண்பா, இன்னும் சில நாட்களில் (ஆகஸ்ட் 15) சுதந்திர தினம் வருது. நாம ஒவ்வொரு வருடமும் கொண்டாடுறோம். ஆனா, "சுதந்திரம்" என்றால் என்னன்னு யோசிச்சிருக்கியா?

**சந்தோஷ்:** சுதந்திரம் என்றால் அடிமைத்தனத்திலிருந்து விடுதலைதானே! நம்ம இந்தியா 1947-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15-ஆம் தேதி பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றது.

**சுபாஷ்:** ஆமாம். அதற்காக எத்தனை பேர் தியாகம் செய்தார்கள் தெரியுமா? Mahatma Gandhi, Subhash Chandra Bose, Bhagat Singh போன்றவர்கள் தங்கள் வாழ்க்கையையே நாட்டிற்காக அர்ப்பணித்தார்கள்.

**சந்தோஷ்:** சரியாச் சொல்ற. அதனால்தான் இந்த நாள் ஒரு விடுமுறை நாளாக மட்டும் இல்லாமல், கிறிஸ்தவர்களாகிய நாம் தேவனுக்கு நன்றி சொல்ல வேண்டிய நாளும்கூட.

**சுபாஷ்:** ஆனால் இன்னொரு விஷயம்... நாடு சுதந்திரம் பெற்றுவிட்டது. ஆனால் மனிதனுடைய உள்ளம் உண்மையிலேயே சுதந்திரமாக இருக்கிறதா?


**சந்தோஷ்:** அதெப்படி?

**சுபாஷ்:** பலர் பயம், பாவப் பழக்கங்கள், கவலைகள் போன்றவற்றிற்கு அடிமையாக இருக்காங்க. "குமாரன் உங்களை விடுதலையாக்கினால், மெய்யாகவே விடுதலையாவீர்கள்" (யோவான் 8:36) என்று வேதாகமம் சொல்லுகிறது. உண்மையான சுதந்திரத்தை இயேசு கிறிஸ்துவால் மட்டுமே தர முடியும்.

**சந்தோஷ்:** வாவ்! செம்ம டா! நாட்டின் சுதந்திரம் வெளிப்புற வாழ்விற்கான சுதந்திரம்; கிறிஸ்துவின் சுதந்திரம் உள்ளத்தின் உண்மையான சுதந்திரம்.

**சுபாஷ்:** Exactly! அதனால்தான் சுதந்திர தினத்தில் நம்ம நாட்டிற்காக ஜெபிக்கணும். நல்ல குடிமக்களாக வாழணும். அதோடு, கிறிஸ்து தருகிற உண்மையான சுதந்திரத்தையும் அனுபவிக்கணும்.

**சந்தோஷ்:** இந்த வருட சுதந்திர தினம் எனக்கு வேற மாதிரி நினைவில் இருக்கும். நாட்டை நேசிப்போம், தேவனுக்குப் பயப்படுவோம், உண்மையான சுதந்திரத்தில் வாழ்வோம்!



Registered under the press and
Registration of Periodicals Act, 2023: TNBIL/2010/32847

